ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

# 2023 වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT



# வருடாந்த அறிக்கை 2023

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்




Power BI
Desktop





# வருடாந்த அறிக்கை 2023

இலங்கை அபிவிருத்தி
நிருவாக நிறுவனம்



**வருடாந்த அறிக்கை - 2023**

**வெளியீடு**
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இல: 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07, இலங்கை.
+94 112 697 934 | info@mos.gov.lk

Printed with VOC free, non toxic vegetable oil-based environmentally-friendly ink, on 100% recycled paper using wood free pulp which is made from 100% post consumer waste paper (Paper recycling is the process of recovering waste paper and remarking it into new paper products.)

Recycling one ton of paper saves17 mature trees, 26 m3 of water, 2.3 m3 of disposal space, 320 liters of oil, and 4,100 kilowatt-hours of electricity.

We encourage you to recycle this Document after use.

# உள்ளடக்கம்


**1. அதிசிறந்த நாளைய தினத்திற்காக அரச துறையினை வலுப்படுத்தல் 7**

நோக்கு 7

பிரதான பணிகள் 8

எமது பெறுப்புக்கள் 8

மூலோபாய நோக்கு 9

பணிப்பாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி 10

**2. நிதிக் கூற்றுகள் 11**

2.1 நிதி நிலைமை தொடர்பானகூற்று 11

2.2 நிதிச் செயலாற்றுகைக்கூற்று 12

2.3 காசுப் பாய்ச்சல் கூற்று 13

2.4 தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தின் மாற்றமடையும் கூற்று 14

2.5 2023ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டின் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் 15

**3. ஆளுகைச் சபையின் அங்கத்தவர்கள் 19**

**4. சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கல்விசார் பதவியணி 20**

**5. சேவை வசதிகள் வழங்குபவர்களின் தகவல்கள் 25**

**6. அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்கமைப்புத் திட்டங்கள் 27**

**7. கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2023 29**

7.1 சேவைக்கால ஆரம்ப பயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 29

7.2 நாடளாவிய சேவைகளுக்கான கட்டாய கற்கை மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டம் 30

7.3 இலங்கை நிருவாக சேவையில் விசேட தரத்தின் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 31

7.4 குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 31

7.5 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் 32

7.6 அந்தந்த நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 32

7.7 2023 ஆம் அண்டில் புதிய பிரவேசம் ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியவர்களின் ஒத்துழைப்புடன் ஆண்டில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் (SLIDA Forum) ஒழுங்கமைத்தல் மற்றும் நடாத்தல் 34

7.8. கல்விசார் பதவியணி (Academic Board) தாபித்தல் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களில் சிறப்பினை பராமரித்துக்கொண்டு உயர் தரத்தில் பயிற்சியினை வழங்குவதற்காக கல்விசார் சபை தாபித்தல் 34

7.9 Credit Based Qualification System 34

**8. தாபன அபிவிருத்திப் பிரிவு 35**

**9. பட்டப்பின் பட்ட கற்கை நிறுவகம் (SPS) 38**

9.1 அறிமுகம் 38

9.2 அழைக்கப்படும் விரிவுரை தொடர்கள் 38

9.3 பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் உறுதிப்படுத்தல் 39

9.4 ஓராண்டு அரச முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் 39

**10. 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் 40**
10.1 உள்வாரியான பரீட்சைகள் - 2023 40
10.2 வெளிவாரிப் பரீட்சைகள் - 2023 41

**11. தகவல் தொழில்நுட்ப நிலையம் 45**

**12. மொழி கற்கைப் பிரிவு 48**

**13. "சந்தரணி" ஆராய்ச்சி நிலையம் 51**

**14. பொது நிருவாகம் 53**
14.1 பதவியணிக்குரிய தகவல்கள் 53
14.2 2023 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் வளாகத்தினை மறுசீரமைத்தல் மற்றும் விருத்தி செய்தல் 54

**15. நூலகங்கள் மற்றும் தகவல் சேவைகள் - கலாநிதி.எச்.எஸ்.வனசிங்ஹ நூலகம் 55**

**16. விசேட நிகழ்வுகள் மற்றும் அடைவுகள் 57**

**17. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2023 66**

# 01

# அதிசிறந்த நாளைய தினத்திற்காக அரச துறையினை வலுப்படுத்தல்

1982 இலக்கம் 09 கொண்ட பாராளுமன்ற சட்டத்தினால் பொது நிருவாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் கீழ் கூட்டிணைந்த நிறுவனமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) 1982 ஆம் ஆண்டு மே மாதத்தில் தாபிக்கப்பட்டது. அரச துறையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் தொழில்சார் முன்னேற்றத்தின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள முன்னணி நிறுவனமாக இந் நிறுவனம் செயற்படுகின்றது.

தமது முதன்மையான பொறுப்பாக மக்களுக்கான பணியினை நிறைவேற்றுவதுடன், அரச துறையின் உத்தியோகத்தர்களுக்காக பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல், அரச துறையின் நிறுவனங்களுக்காக முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவித்தல் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் அமுல்படுத்தப்படும் பிரதான செயற்பாட்டுப் பணிகளாகும்.

இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திடம் பட்டப்பின் படிப்பு பட்டமளிக்கும் தரத்தினை வழங்கியுள்ளது. அதன்படி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கை பிரிவால் அரச முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு மற்றும் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா வழங்கப்படுகின்றது. அமைச்சின் செயலாளர்கள், பிரதான நிறைவேற்று தரத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்கள் அனைவரினாலும் உயரிய மட்டத்திலான பங்களிப்பினை எதிர்பார்க்கும், துரிதகதியில் மாற்றமடையக் கூடிய மற்றும் சவால் மிக்க தற்போதைய அரச முகாமைத்துவ கட்டமைப்பில் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பொது நிர்வாகம் தொடர்பான விடயபொறுப்பு அமைச்சர் அவர்களின் முழுமையான வழிகாட்டலின் கீழ், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளுகைச் சபையால் நிறுவனத்தின் கொள்கைகள் தொடர்பாக தீர்மானிக்கும் பொறுப்பு வகிக்கப்படுகிறது.

**நோக்கு**

"அரச துறையின் கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக ஆசியாவின் அதி சிறந்த மத்திய நிலையமாதல்"

**செயற்பணி**

கற்றல் மற்றும் அபிவிருத்தி, ஆலோசனை சேவை மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் ஆக்கத்திறன், எதிர்கால நோக்குடன் கூடிய மற்றும் பிரசைகளின் கேந்திரமாகக் கொண்ட அரச சேவையின் பொருட்டு தொடர்ச்சியான மேம்படுத்தல்களுக்கான வசதிகளையளித்தல்

**மூலோபாய இலக்குகள்**

- அதிசிறந்த செயற்பாட்டு மற்றும் வினைத்திறன் மிக்க அரச சேவையினை உருவாக்குவதற்காக தேசிய அபிவிருத்தி இலக்கிற்கு பங்களிப்புச் செய்தல்.
- தேசிய மட்டத்தின் கொள்கை அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்யும் போது பிரதான பணிகளை நிறைவேற்றுதல்.
- இலங்கையின் அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தொடர்பாக அதன் தரப்புகளிடத்தில் நேர்மறையான பிரதிவிம்பத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக கற்கை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு அதிக தேவைகளை ஏற்படுத்தல்.
- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு மத்திய நிலையமாக மாற்றியமைத்தல்.

**பிரதான பணிகள்**

- கற்றல் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஊடாக அரச துறையின் முகாமைத்துவ பதவியணியின் ஆற்றல் அபிவிருத்தி.
- பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் அரச துறையின் உத்தியோகத்தர்களின் அறிவாற்றலை விருத்தி செய்தல்.
- அரச கொள்கை மற்றும் முகாமைத்துவத்திறகு உரிய செயற்பாட்டு பயனை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சி கற்கைகளின் களஞ்சியத்தை விருத்தி செய்தல்.
- அரச துறையின் நிறுவனங்களின் மற்றும் அரசாங்கத்திற்கு உரிய தொழில்முயற்சியாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்காக தாபன அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- அரச துறைக்காக வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் மொழித் தேர்ச்சி பரீட்சையினை நடாத்துதல்.





## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் / இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் ஆளுகைச் சபையின் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் இந்தச் சுருக்கமான செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இந்த ஆண்டில் முகாமைத்துவ மட்டத்தின் உத்தியோகத்தர்களது திறன்களை திசைமுகப்படுத்தலின் பயனாக, தலைமைத்துவம் மற்றும் புத்தாக்கத்தினை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு புதிய நிகழ்ச்சித்திட்டங்களும், தற்போது நடைமுறைப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை வேறுபடுத்தியும், பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான தனது மூலோபாய இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இவ்வாண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

அரச ஊழியர்களுக்கான மிகப்பெரிய பயிற்சி நிறுவனமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் முக்கியமான வகிபாகத்தை வகிக்கும் அதே வேளையில், பல ஆண்டுகளாக அனைத்து துறைகளிலும் தனது பணியை விரிவுபடுத்தி வருவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அமைச்சின் வழிகாட்டுதலின்படி, இந்த வருடத்தில் நாடளாவிய சேவைகளுக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 246 உத்தியோகத்தர்களுக்கு நான்கு சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சிகளும், மேற்படி சேவைகளின் 510 உத்தியோகத்தர்களுக்கு நான்கு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன. இது தவிர, புதிதாக பதவி உயர்வு பெற்ற 31 சிறப்பு தர உத்தியோகர்த்தர்களுக்கும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டுள்ளதுடன், இது நிறுவகத்தால் அமுல்படுத்தப்பட்ட புதிய தொடக்கமாகும்.

நாட்டிற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள நிர்வாகிகளை உருவாக்குவதற்காக குறுகிய கால பயிற்சி திட்டங்கள், டிப்ளோமா திட்டங்கள் மற்றும் பட்டப்பின் படிப்புகள் ஆண்டு முழுவதும் நடாத்தப்பட்டுள்ளன. மேலும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இந்த வருடத்தில் பல்வேறு நிறுவனங்களுக்காக முகாமைத்துவ ஆலோசனைகள் மற்றும் நிறுவனங்களின் கோரிக்கை பிரகாரம், தேவைக்கமைவாக தயாரிக்கப்படும் பல கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது என்பதை இதன்போது குறிப்பிடுதல் வேண்டும்.

அதேபோன்று, Credit Based Qualification System (CBQS), அதிக தரத்துடன்கூடிய பயிற்சிகளை வழங்குவதற்கும் பங்கேற்பாளர்களுக்கு ஒரு நற்புறவுடன்கூடிய கற்றல் அனுபவத்தை கட்டியெழுப்புவதற்காக ஆண்டில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் மன்றத் தொடர்களை நடாத்துவதற்காக கற்கைசபை (Academic Board) தாபித்தல் போன்ற பல்வேறு முறைமைகள் ஊடாக தமது சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்கு இந்த நிறுவனம் தொடர்ச்சியாக முயற்சிகளை முன்னெடுக்கின்றது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சேவைச் சிறப்பை வலுப்படுத்துவதற்கு வலுவான ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்கிய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு.தினேஷ் குணவர்தன மற்றும் ஆளுகைச் சபையின் உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தமது தொடர்ச்சியான மற்றும் உறுதியான முயற்சிகளின் ஊடாக நிறுவனப் பயண வழியில் பெறுமதிகளை சேர்க்கின்ற இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பதவியினர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தையும் நான் பாராட்டுகின்றேன்.

**கே.டீ.என்.ரஞ்சித் அசோக**
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு



## பணிப்பாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 2023ஆம் ஆண்டுக்காக வருடாந்த அறிக்கையில் இந்த செய்தியினை சேர்ப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த சில வருடங்களாக நாம் பல சவால்கள் மற்றும் சிரமங்களை எதிர்கொண்டோம். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் முழு ஆற்றல் மீது இந்த நிலைமையானது கட்டாயமாக பாதித்தது. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மேலதிக சவால்கள் ஊடாக எங்களின் வருடாந்த பாடத்திட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்வதற்கும், பங்கேற்பாளர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும், மூலோபாயங்கள் தொடர்பில் மீண்டும் சிந்திப்பதற்கும், பொதுச் சேவையில் உள்ள பல்வேறு துறைகள் மீது எங்கள் சேவைகளை விரிவுபடுத்துவதற்கும் எங்களைக் கட்டாயப்படுத்தியது.

இந்த சவால்களுக்கு மத்தியிலும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தால் குறிப்பிடத்தக்க சாதனைகளை எய்துகொள்ளப்பட்டுள்ளது. எமது வழக்கமான பயிற்சி திட்டங்கள், டிப்ளோமா திட்டங்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு திட்டங்கள் தவிர்ந்த தகவல் தொழில்நுட்பத்தில் தொடர்ச்சியான முன்னேற்றம் மூலம் எமது மிக முக்கியமான துறைகளை மேம்படுத்துவதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எமது கல்வி நடவடிக்கைகளை திறமையாயகவும், நன்கு ஒழுங்கமைக்கவும் மேம்படுத்தவும், எம்மால் Credit Based Qualification System (CBQS) மற்றும் Centralized Academic Management System (CAMS) என்ற முறைமைகள் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. எங்கள் பங்குதாரர்களுக்கு புதிய அறிவை வழங்குவதற்காக எங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், இந்த கட்டமைப்புகள் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. எம்மால் 2023 ஆம் ஆண்டில் பல புதிய முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அண்மையில் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கான தரமுயர்வு பெற்ற அலுவலர்களுக்கு செயலமர்வுத் தொடர்கள், அரச துறையின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன், SLIDA மன்றமும் இதற்குள்ளடங்கும்.

எங்கள் சேவையை மேலும் வலுப்படுத்தும் வகையில், உள்ளூர் நிறுவனங்களுடன் வலையமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன். சில சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு அப்பால் அரச நிறுவனங்களில் தாபன ஆற்றல்களை மேம்படுத்தவதற்காக பல்வேறு வகையில் ஒத்துழைப்புகளை வழங்கி, பொது நிறுவனங்களுக்கான முகாமைத்துவ ஆலோசனை மற்றும் நிறுவனத்தின் கோரிக்கைகள் பிரகாரம் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட கற்கை மற்றும் சில அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் எம்மால் முனைப்பாக வழங்கப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மொழிக்கற்கை நிலையம் அரசகரும மொழிகள் திணைக்களத்துடன் ஐந்து வருட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

உள்ளகப் பரீட்சை மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களின் கோரிக்கைகளின் பிரகாரம் வெளியக பரீட்சைகளை நடாத்துவதற்காக எமது பரீட்சைப் பிரிவால் மிகமுக்கியமான கடமைப்பொறுப்புகளும் நிறைவேற்றப்பட்டன. எங்கள் நிறுவன இலக்குகளை அடைவதில் எங்கள் ஊழியர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பை ஒப்புக்கொண்டு, பணியாளர்கள் மத்தியில் குழுப்பணி மற்றும் குழு உணர்வை மேம்படுத்துவதற்காக ஒரு வெளியக பயிற்சி திட்டத்தை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். இறுதியாக, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தாபன ரீதியிலான எமது தொடர்ச்சியான முயற்சிகளுக்காக தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் ஆதரவிற்காக கௌரவ பிரதமர் மற்றும் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சர் அவர்களுக்கும், அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும், ஆளுகைச் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும், அனைத்து அக்கறைதாரர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அரசதுறையில் முதன்மையான கற்கை உதவியாளராக அதிசிறந்த சேவையினை வழங்குவதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் படிப்படியாக மேம்படுவதுடன், எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும்.

**நாலக கலுவெவ,**
பணிப்பாளர் நாயகம்

# நிதிக் கூற்றுகள் 02

## 2.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

### 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று

| | குறிப்புகள் | 2023 | 2022 வெளியிடப்பட்ட |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூபா | ரூபா |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| வங்கி மீதி | **03** | 10,977,881 | 4,823,198 |
| காலாண்டு வைப்புக்கள் | **04** | 398,229,237 | 360,433,085 |
| கிடைக்கப்பெறவேண்டிய நிலுவைகள் | **05** | 29,971,345 | 37,764,609 |
| கையிருப்புகள் | **06** | 7,150,573 | 7,419,605 |
| முன்செலுத்தல்கள் | **07** | 4,389,155 | 1,849,143 |
| முற்பணம் | | 69,802 | 69,802 |
| பதவியணி கடன் | **08** | 12,736,525 | 14,733,066 |
| | | **463,524,517** | **427,092,508** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | **09** | 466,024,712 | 483,932,171 |
| எல்லை மதில்கள் - மேற்கொள்கின்ற வேலைகள் | | 3,798,113 | |
| பணிக்கொடை நிதிய முதலீடு | **10** | 52,893,624 | 46,534,724 |
| வைப்புக் கணக்குகள் | **11** | 1,299,500 | 1,299,500 |
| | | **524,015,949** | **531,766,395** |
| **மொத்த சொத்துக்கள்** | | **987,540,466** | **958,858,903** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| செலுத்தப்படவேண்டிய வைப்புகள் | **12** | 12,543,668 | 17,537,263 |
| முன்னரான கிடைக்கப்பெற்றவைகள் | **13** | 62,974,008 | 72,037,753 |
| திரண்ட செலவினம் | **14** | 13,535,813 | 9,145,633 |
| எதிர்பாரா கிடைக்கப் பெறுவனவுகளுக்கான ஏற்பாடுகள் | | 1,427,240 | 2,273,387 |
| | | **90,480,729** | **100,994,037** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| தொலைதூர கற்கை நிலையம் | **15** | 14,895,531 | 16,550,589 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | **16** | 31,625,875 | 34,995,448 |
| | | **46,521,406** | **51,546,037** |
| **மொத்த பொறுப்பு** | | **137,002,135** | **152,540,073** |
| **தேறிய சொத்துக்கள்** | | **850,538,331** | **806,318,830** |
| **தேறிய சொத்துக்கள்/உரித்துக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் - திறைசேரி மானியங்கள் | | **491,907,397** | **509,487,842** |
| ஏனைய ஒதுக்கங்கள் - சொத்துக்களின் மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் | **17** | **161,165,157** | **161,165,157** |
| திரட்டிய மிகை / பற்றாக்குறை | **18** | **197,465,777** | **135,665,830** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/பொறுப்புகள்** | | **850,538,331** | **806,318,830** |

## 2.2 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதி செயலாற்றுகை கூற்று**

| | குறிப்புகள் | 2023 | 2022 வெளியிடப்பட்ட |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| திறைசேரி பங்களிப்பு | **19** | 147,580,445 | 132,175,368 |
| **ஏனைய வருமானம்** | | | |
| பாடநெறிக் கட்டணம் | **20** | 178,500 | 416,000 |
| மண்டபங்களை வாடகைக்கு வழங்குதல் | | 21,544,987 | 13,644,692 |
| வெளியீடுகளை விற்பனை செய்தல் | | 100,004 | 63,013 |
| முதலீடுகள் மூலம் பெற்ற வருமானம் | **21** | 76,601,278 | 60,316,934 |
| கடன் வட்டி | | 574,518 | 594,444 |
| வாடகை நிதி | **22** | 19,804,864 | 16,010,755 |
| குத்தகைக் கூலி | | 1,655,059 | 1,655,059 |
| பட்டப்பின் பட்டபடிப்பு கற்கை நிலையம் | | 1,783,970 | 10,266,155 |
| மொழி வேலைத்திட்டங்கள் | | 3,089,500 | 1,655,550 |
| ஆலோசனைச் சேவைகள் | **23** | 22,548,578 | 19,602,043 |
| வருமானத்தின் மூலம் நிறுவனத்தின் பங்கு | | 10,799,352 | 5,906,611 |
| உதவி மானியங்கள் | | 17,100 | 7,500 |
| எதிர்பாரா கிடைக்கப் பெறுவனவைகளுக்கான மிகை ஒதுக்கீடு | **24** | 846,147 | - |
| பல்வேறு வருமானம் | **25** | 32,089,062 | 10,032,361 |
| **மொத்த வருமானம்** | | **339,213,363** | **272,346,486** |
| **செலவினம்** | | | |
| தனிப்பட்ட சம்பளம் | **26** | 124,584,837 | 131,598,958 |
| பதவியணி நலன்புரி | **27** | 5,343,261 | 3,967,016 |
| போக்குவரத்து மற்றும் கொடுப்பனவு | **28** | 1,300,508 | 612,597 |
| பயன்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் | **29** | 38,982,451 | 29,345,288 |
| போக்குவரத்து | **30** | 6,885,235 | 4,165,943 |
| நிலையான சொத்துக்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | **31** | 14,454,004 | 4,638,823 |
| விநியோகம் மற்றும் தேவைகள் | **32** | 6,789,322 | 5,335,357 |
| நிதிக் கட்டணம் | **33** | 3,881,521 | 896,090 |
| கணக்காய்வு கட்டணங்கள் | | 1,179,800 | 964,000 |
| நூலக சேவை | **34** | 272,933 | 182,294 |
| பயிற்சி மற்றும் மதிப்பீடுகள் | **35** | 1,349,527 | 234,980 |
| வெளியீடு மற்றும் தகவல் சேவை | **36** | 33,215 | 43,596 |
| தேய்மானம் மேற்கொள்ளல் | **37** | 30,958,260 | 34,424,870 |
| பட்டப்பின் படிப்பு கற்கை நிறுவகம் | **38** | 12,042,012 | 8,271,395 |
| மொழி வேலைத்திட்டங்கள் | **39** | 4,055,324 | 894,790 |
| ஆலோனை செயற்பாடுகள் | **40** | 22,548,578 | 19,602,043 |
| பணிக்கொடை கொடுப்பனவுக்கான ஒதுக்கீடுகள் | | 2,186,733 | 4,924,108 |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் | **41** | 565,898 | 330,354 |
| ஏனைய நிறுவனங்களுக்கு சொத்துக்களை மாற்றுதல் | **42** | - | 875,000 |
| எதிர்பாரா கிடைக்கப்பெறுவனவுகளுக்கான ஒதுக்கீடுகள் | | - | 358,811 |
| **மொத்த செலவினம்** | | **277,413,417** | **251,666,312** |
| **கால எல்லைக்கான மிகை / (பற்றாக்குறை)** | | **61,799,947** | **20,680,174** |
| **திறைசேரி ஒதுக்கீடு அற்ற மிகை / (பற்றாக்குறை)** | | **(85,780,498)** | **(111,495,194)** |

## 2.3 காசுப் பாய்ச்சல் கூற்று

**2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | 2023 | 2022 வெளியிடப்பட்ட |
|---|---|---|
| **செயற்பாட்டுப் பணிகள் மூலம் உருவான நிதிப் பாய்ச்சல்** | ரூபா | ரூபா |
| **ஆண்டிற்கான தேறிய மிகை / பற்றாக்குறை** | **61,799,947** | **20,680,174** |
| நிதியங்களின் அசைவிற்காக தாக்கம் செலுத்தப்படாதவைகளுக்கான சீராக்கம் | | |
| தேய்மானம் | 30,958,260 | 34,424,870 |
| கடன் தீர்ப்பு | (17,580,445) | (22,175,368) |
| பணிக்கொடை கொடுப்பனவிற்கான ஒதுக்கீடு | 2,186,733 | 4,924,108 |
| குறுகிய கால வைப்பிற்கான வட்டி | (76,601,278) | (60,316,934) |
| எதிர்பாரா கிடைக்கப்பெறுவனவுக்கான மிகை / பற்றாக்குறை | (846,147) | 358,811 |
| வேறு நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதி | - | 875,000 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றம் முன்னர் செ.மிகை / (பற்றாக்குறை)** | **(82,931)** | **(21,229,340)** |
| இருப்புக்களின் குறைவு / (அதிகரிப்பு) | 269,032 | (971,630) |
| முன்செலுத்தல்களின் குறைவு / (அதிகரிப்பு) | (2,540,013) | 1,500,002 |
| பதவியணி கடன் குறைவு / (அதிகரிப்பு) | 1,996,542 | (748,357) |
| கிடைப்பனவுகளின் குறைவு / (அதிகரிப்பு) | 7,793,264 | 10,383,096 |
| செலுத்த வேண்டிய வைப்புக்களின் அதிகரிப்பு /(குறைவு) | (4,993,594) | (649,595) |
| திரண்ட செலவினங்களின் அதிகரிப்பு /(குறைவு) | 4,390,179 | 5,760,248 |
| முற்பண கிடைப்பனவு அதிகரிப்பு /(குறைவு) | (9,063,745) | (33,531,175) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (5,556,305) | (5,647,518) |
| **செயற்பாட்டுப் பணிகள் மூலம் பெற்ற தேறிய நிதிப் பாய்ச்சல்** | **(7,704,640)** | **(23,904,928)** |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் தேறிய நிதிப்பாய்ச்சல்** | | |
| கட்டிடங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு | - | (1,815,446) |
| எல்லை மதில்களில் - மேல்கொள்கின்ற வேலைகளின் அதிகரிப்பு | (3,798,113) | - |
| மனைப் பொருட்கள் மற்றும் பொருத்துதல்களின் அதிகரிப்பு | - | (53,746) |
| அலுவலக உபகரணங்களின் கொள்வனவு | (207,639) | (12,240) |
| மின் உபகரண பொருத்துதல்களின் கொள்வனவு | (828,048) | (1,950,414) |
| கணினிகள் கொள்வனவு செய்தல் | (11,459,400) | (2,812,100) |
| நூல்கள் கொள்வனவு செய்தல் | (96,921) | (93,328) |
| ஏனைய சொத்துக்களின் முதலீடு | (458,793) | (177,664) |
| பணிக்கொடை நிதிய முதலீடு | (6,358,901) | (3,842,081) |
| குறுகியகால வைப்புக்களின் வட்டி கிடைக்கப்பெறுதல் | 76,601,278 | 60,316,934 |
| குறுகியகால வைப்புக்களின் வட்டி அதிகரிப்பு | (37,796,152) | (26,394,630) |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் பெற்ற தேறிய நிதிப் பாய்ச்சல்** | **15,597,313** | **23,165,285** |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | |
| அரசாங்கத்தின் மானியங்கள் - மூலதனம் | - | 680,000 |
| தொலைதூர கற்கை மத்திய நிலையத்தின் மீதி அதிகரிப்பு/ (குறைவு) | (1,655,059) | (1,655,059) |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் பெற்ற தேறிய நிதிப் பாய்ச்சல்** | **(1,655,059)** | **(975,059)** |
| காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | 6,154,682 | (22,944,041) |
| காலவெல்லை ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 4,823,198 | 27,767,240 |
| **காலவெல்லை இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள்** | **10,977,881** | **4,823,198** |

## 2.4 தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் மாற்றமடையும் கூற்று

| | நிர்வாக கட்டமைப்பின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் | | | மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமை |
|---|---|---|---|---|
| | பங்களிப்பு மூலதனம் | ஏனைய குழாம் | திரண்ட மிகை / (பற்றாக்குறை) | |
| | ரூபா. ச. | ரூபா. ச. | ரூபா. ச. | ரூபா. ச. |
| 2022 சனவரி 01 ஆம் திகதியன்று மீதி | 530,983,210 | 161,121,424 | 114,985,656 | 807,090,290 |
| கட்டிடங்களின் மீள்கணிப்பீட்டுக் குழுவின் ஒதுக்கம் | | | | - |
| ஏனைய நிறுவனங்களினால் மாற்றப்பட்ட சொத்துக்கள் | | | | - |
| ஏனைய நிறுவனங்களினால் மாற்றப்பட்ட சொத்துக்கள் | | 43,733 | | 43,733 |
| **கணக்கீட்டுக் கொள்கையின் மாற்றங்கள்** | | | | |
| கணக்கீட்டுக் கொள்கையின் மாற்றங்கள் | | | | |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள் | | | | - |
| மீள் வெளிப்பாட்டு நிலுவை | **530,983,210** | **161,165,157** | **114,985,656** | **807,134,024** |
| 2022 ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / உரிமைகளின் மாற்றங்கள் | | | | |
| திறைசேரியில் இருந்து பெற்ற பங்களிப்பு - மூலதனம் | 680,000 | | | 680,000 |
| பிற்போடப்பட்ட வருமானத்தின் கடன்தீர்ப்பு | (22,175,368) | | | (22,175,368) |
| கால எல்லைக்கான மிகை / பற்றாக்குறை | | | 20,680,174 | 20,680,174 |
| 2022 டிசம்பர் 31ஆம் திகதியன்று முன்கொண்டு சென்றமீதி | **509,487,842** | **161,165,157** | **135,665,830** | **806,318,830** |
| | | | | |
| 2023 சனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை | 509,487,842 | 161,165,157 | 135,665,830 | 806,318,830 |
| கட்டிடங்களின் மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் | | | | - |
| **கணக்கீட்டுக் கொள்கையின் மாற்றங்கள்** | | | | |
| கணக்கீட்டுக் கொள்கையின் மாற்றங்கள் | | | | - |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள் | | | | - |
| மீள் வெளியீட்டு நிலுவை | **509,487,842** | **161,165,157** | **135,665,830** | **806,318,830** |
| **2022 ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / உரிமைகளின் வேறுபாடு** | | | | |
| திறைசேரியால் பெற்ற பங்களிப்புக்கள் - மூலதனம் | - | | | - |
| பிற்போடப்பட்ட வருமானத்தின் கடன்தீரபபு | (17,580,445) | | | (17,580,445) |
| கால எல்லைக்கான மிகை / பற்றாக்குறை | | | 61,799,947 | 61,799,947 |
| **2023 டிசம்பா் 31 ஆம் திகதியன்று முன்கொண்டு சென்ற மீதி** | **491,907,397** | **161,165,157** | **197,465,777** | **850,538,331** |

## 2.5 2023ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டின் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

### 2.5.1. பொது

**I. அறிக்கையிடல் கட்டமைப்பு**

1982ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க சட்டத்தால் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், இலக்கம் 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது. அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் செயற்படுகின்றது.

**II. அறிக்கையிடும் காலப்பகுதி**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிதி தொடர்பான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 தொடக்கம் 2023 திசெம்பர் 31 வரையாகும்.

**III. நிதிக் கூற்றுகளை அங்கீகரித்தல்**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதிக் கூற்றுகளை வழங்குவதற்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் சபை அறையில் 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி பி.ப. 5.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

### 2.5.2. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

**I. இணக்கப்பாட்டு அறிக்கை**

இலங்கை பட்டயம் பெற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (SLPSAS) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளுடன், நிதி நிலைக் கூற்று, நிதிச் செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பின்வரும் 2.5.2.II தொடக்கம் 2.5.2.XIX வரை குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் பயன்படுத்தப்பட்டன.

**II. தயாரிக்கும் அடிப்படை**

நிதிக் கூற்றுகள் இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், வேறு வகையில் குறிப்பிடப்படாவிடின் திரண்ட அடிப்படையில் மற்றும் வரலாற்று செலவின எண்ணக்கருவின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

**III. ஒப்பீட்டு தகவல்கள்**

வேறு வகையில் குறிப்பிடப்படவில்லையெனில், நிறுவனத்தால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகள் இதற்கு முன்னரான ஆண்டில் பயன்படுத்திய கொள்கைகளுடன் ஒழுங்கமைவானதாகும். கடந்த ஆண்டில் மதிப்பீடுகள் மற்றும் வாசகங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் நடப்பாண்டில் சமர்ப்பிப்பதற்காக மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**IV. ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள்**

அனைத்து அளவு ரீதியான நிதி நிலைமைகளின் நிகழ்வுகளை கவனத்தில் கொண்டுள்ளதுடன், நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகளின்போது பொருத்தமான சீராக்கல் அல்லது வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**V. பயன்பாட்டு நாணய அலகுகளை சமர்ப்பித்தல்**

நிறுவனம் செயற்படும் அடிப்படை பொருளாதார சூழலின் பயன்பாட்டு நாணய அலகான இலங்கை ரூபாக்களில் (LKR) நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**VI. தொடர்ச்சியான நிலைப்பாடு**

முகாமைத்துவத்தால் தமது நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பராமரிக்கும் ஆற்றலை மதிப்பிடப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடருவதற்கு நிறுவனத்திடம் போதுமான வளங்கள் இருப்பதாக முகாமைத்துவம் திருப்தியடைகின்றது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டின் கீழ் செயற்படுவதற்காக நிறுவனத்திடம் காணப்படும் குறிப்பிடத்தக்க ஆற்றல் காரணமாக ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பில் முகாமைத்துவம் எதிர்வுகூறவியலாது. அதன்படி, நிறுவனத்தின் நிதிநிலை கூற்றுகள் யாவும் தொடர்ந்தியங்கும் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

## VII. சொத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பிடும் அடிப்படை

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் செலவினம் அல்லது மீள்கணிப்பீடு பெறுமதியில், திரட்டியதேய்மானம் கழிக்கப்பட்ட பின்னர் பெறுமதி காண்பிக்கப்படுகிறது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும், நேர் கோட்டு முறையின் கீழ் தேய்மானம் செய்து நிதி செயலாற்றுகை கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. காணியின் உறுதி இதுவரை வழங்கப்படவில்லை என்பதால் 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்குரிய காணியின் (காணி அளவு 1.186 ஹெக்டயர்) பெறுமதி (ரூபா. 2,804,400,000.00) நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்படவில்லை.

- **தேய்மானம்**

தேய்மானங்களின் அளவுகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

| சொத்துக்களின் தொகுதி | அளவு |
|---|---|
| கட்டடங்கள் | 2.5% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| மின் உபகரணங்கள் | 20% |
| கணினி | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| மென்பொருள் பெகேஜ் | 20% |
| ஏனையவை | 10% |

கொள்வனவு செய்யப்படுகின்ற ஆண்டு மற்றும் விற்பனை செய்கின்ற ஆண்டில், பயன்படுத்தும் காலவெல்லை அடிப்படையாகக்கொண்டு தேய்மானம் காண்பிக்கப்படுவதுடன், கொள்வனவுகள் மேற்கொள்கின்ற மாதத்தில் முழுமையாக தேய்மானங்களை மேற்கொள்வதுடன், விற்பனை செய்கின்ற மாதத்தில் தேய்மானம் காண்பிக்கப்படுவதில்லை.

## VIII. மீள்கணிப்பீடு

சொத்துக்களை அடையாளம் காணப்பட்டதன் பின்னர், நியாயமான பெறுமதி நம்பிக்கையான முறையில் அளவிட முடியுமான சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்பு அதன் மீள்கணிப்பீட்டு பெறுமதிக்கு, அதாவது மீள்கணிப்பீடு செய்த திகதிக்கு காணப்பட்ட நியாயமான பெறுமதியில், கடந்தகால திரட்டிய தேய்மானம் மற்றும் பிற்கால திரட்டிய இழப்புகளின் பெறுமதிக்கு அறிக்கையிடப்படுகிறது. அதன்படி முன்கொண்டு செல்லப்படுகிறது. அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களத்தால் கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் ஒழுங்குமுறையில் 2021 மற்றும் 2020ஆம் ஆண்டில் மீள்கணிப்பீடு செய்யப்பட்டதுடன், மீள்கணிப்பீட்டு மிகை, சொத்துக்களின் பெறுமதி அதிகரிக்கப்பட்ட அளவு வரை நேரடியாக மீள்கணிப்பீட்டு மிகைக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

## IX. இருப்புகள்

செலவினம் மற்றும் நிகரதேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதிக்கு இருப்புகள் அளவிடப்படுகிறது. முதலாவதாக கொள்வனவு செய்கின்ற இருப்புகளை முதலாவதாக அகற்றல் என்கிற கொள்கையின் கீழ் இருப்புகளின் செலவினம் கணக்கிடப்படுவதுடன், இதற்குள் இருப்புகளின் கொள்வவு செலவினங்கள் மற்றும் தற்போது காணப்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு மேற்கொண்ட ஏனைய செலவினங்களும் உள்ளடக்கப்படும்.

## X. கிடக்கப்பெற வேண்டியவை

அறவிடமுடியாக்கடன் மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஒதுக்கீடுகளைக் கழித்த பின்னர் தேறக்கூடிய பெறுமதிக்கு கிடைக்கப்பெற வேண்டியவைகள் குறிப்பிடப்படுகிறது. கடன்கொடுநர்கள் தேறக்கூடிய பெறுமதியில் குறிப்பிடப்படுகிறது. பட்டநிலை பின்படிப்பு கற்கை நிறுவனம் மற்றும் மொழி கற்கை நிலையம் என்பவற்றால் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகை மீது மட்டும் சந்தேகத்திற்குரிய கடனுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

## XI. காசும் கசுக்கு சமமானவைகளும்

கையிருப்புகள் மற்றும் வங்கியில் உள்ள பணம் அத்துடன் முதிர்வடையும் வரை காணப்படும் குறுகியகால வைப்புகள் செலவினத்தில் கணக்கு வைக்கப்படும். காசுப்பாய்ச்சல் கூற்றுக்காக காசும் காசுக்கு சமமானவைகள் என்பது கையிருப்பும் வங்கியில் உள்ள பணமும் ஆகும்.

**XII. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்**

அனைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்புகள் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கையில் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் மற்றும் தொலைதூரக் கற்றல் நிலையம் (Distance Learning Center Limited) இடையில் 2023.02.16 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் தொலைதூரக் கற்கை நிலையத்தால் 4 ஆவது மாடியின் நிருமாணிப்பு செலவினமாக ரூபா. 49,651,765.00 தொகை முதலீடு செய்துள்ளதுடன், குறித்ததொகை 30 ஆண்டுகளில் கடன்தீர்ப்பு செய்யப்படும். அதன்மீதி நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழ்க் காண்பிக்கப்பட்டுள்ளது.

**XIII. ஊழியர் நலன்கள்**

அனைத்து ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ளடக்கப்படுகின்றனர். பொதுவாக காணப்படும் நலன்புரி வசதிகளுக்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்திட்டம் செயற்படுகின்றது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் பொருட்டு நிறுவனத்தால் ஒழுங்குமுறையில் 15% மற்றும் 3% ஆன பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

- **பணிக்கொடை**

நிதிநிலை தொடர்பான கூற்றின் திகதியில், எவரேனும் ஊழியர் அல்லது ஊழியர்கள் பணிக்கொடை செலுத்தல் தொடர்பான சட்டத்தின் ஒதுக்கீடுகளின் கீழ் பணிக்கொடை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறாவிடினும், அனைத்து ஊழியர்களும் குறித்த ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுகின்றார்கள் என்ற அனுமானத்தின் கீழ், நிதி நிலைமை தொடர்பான திகதியில் குறித்த அனைத்து ஊழியர்களும் ஓய்வுபெறுவார்கள் என்ற அடிப்படையில், 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் தொடர்பான சட்டத்தின் கீழ் ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு சனவரி 24 ஆம் திகதியில் ஆளுகைச் சபையால் மேற்கொண்ட பிரேரணை பிரகாரம், 2014 தொடக்கம் பணிக்கொடை செலுத்துவதற்கு நீண்டகால முதலீடுகள் பராமரிக்கப்படுகின்றது.

**XIV. அரசாங்கத்தின் கொடைகளும் மானியங்களும்**

இலங்கை அரசாங்கத்தின் பொது திறைசேரியால் மீண்டுவரும் அளிப்புகள் தொடர்புடைய செலவுகள் அடையாளம் காணப்படும் காலப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகிறது.

2013ஆம் ஆண்டு முதல், பொதுதிறைசேரியின் மூலதன மானியம் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக அடையாளம் காணப்பட்டதுடன், சொத்துக்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் மூலதன மானியம் பின்னரான காலங்களில் செலவிடப்படுவதுடன் LKAS 20 இன் படி ஒத்திவைக்கப்பட்ட வருமானமாக அடையாளம் காணப்படுகிறது. காசும் காசுக்குச் சமமானவை அடங்கலாக ஏனையசொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தின் மானியங்களில் பொறுப்புகளை கழிக்கப்பட்டதன் பின்னர் (கிடைக்கப்பெற்ற மானியங்கள் மீதான பொறுப்புகளைத் தவிர்ந்த) பொறுப்பாக அடையாளம் காணப்படுகிறது.

ஆண்டின் இறுதியில் மூலதன மானியங்களின் மீதி அடுத்துவரும் ஆண்டுக்கு கொண்டு செல்வதுடன், தேவையானவிடத்து பயன்படுத்தப்படும்.

**XV. ஏற்பாடுகள் மற்றும் தற்செயலான பொறுப்புகள்**

வளங்கள் வெளிச்செல்வதன் பயனாக பொறுப்புகள் மற்றும் நம்பகமான மதிப்பீட்டைத் தயாரிக்க முடியுமான நிதிநிலைக் கூற்றின் திகதியில் காணப்படும் அனைத்துப் பொறுப்புகளுக்கும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

பொது முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மொழி நிலையத்திற்கு ஏற்படையதாக தற்செயலான வரவுகளுக்கான ஒதுக்கீடு ஆண்டு இறுதி நிலுவைத் தொகையில் 10% என்ற வகையில் வழங்கப்படுகிறது.

**XVI. வருமானம் அடையாளம் காணுதல்**

நிறுவனத்திற்குப் பொருளாதாரப் பயன்கள் கிடைப்பதாக சாத்தியக்கூறுகள் இருக்கும் அளவிற்கு மட்டுமே வருவாய் அடையாளம் காணப்படுகிறது. மேலும் அது தொடர்பான செலவுகள் அல்லது ஏற்படும் செலவுகளை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும். பெறப்பட்ட அல்லது பெறத்தக்க வருமானத்தின் நியாயமான மதிப்பில் வருவாய் அளவிடப்படுகிறது.

வருமானம் அடையாளம் காணுவதற்கு பின்வரும் விசேட அளவுகோள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(அ) மீண்டுவரும் செலவினம் பொருட்டு பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறும் மானியங்கள் குறித்த ஆண்டின் வருமானமாக அடையாளம் காணப்படும்.

(ஆ) சேவைபெறுநர் முகவர் நிறுவனங்களிடமிருந்து ஆலோசனை ஒப்படைகளுக்கான பணத்தொகையிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியை, பயன்படுத்தும் வரை பொறுப்பாக அடையாளம் காணப்படுகிறது. செயலாற்றுகையின் விகிதாசாரத்திற்கமைவாக வருமானமாக அடையாளம் காணப்படும்.

(இ) பயிற்சி கற்கைநெறிகள், வாடகை மற்றும் ஏனையவற்றால் கிடைக்கப்பெறும் வருமானம் திரட்டிய அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது.

(ஈ) சேவை ஆரம்பப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஆலோசனை வருமானமாக வகைப்படுத்தப்படும்.

## XVII. செலவினங்களை அடையாளம் காணுதல்

செலவினங்கள் மற்றும் வருமானம் விசேடமான விடயங்களிலிருந்து உழைக்கப்பட்டுள்ளதுடன், நேரடி தொடர்பின் அடிப்படையில் நிதி செயல்திறன் அறிக்கையில் அடையாளம் காணப்படுகிறது. தாபனத்தை நடாத்துவதற்கும், சொத்து, பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை திறமையான முறையில் பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் நிகர மிகை அல்லது பற்றாக்குறையை கணக்கிடுவதற்காக வருவாயிலிருந்து அறவிடப்படுகிறது.

## XVIII. விடுதிகளுக்கான நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு முதல், விடுதிச் செயற்பாடுகளின் நிதிசார் பயன்கள் நிதி செயற்றிறன் அறிக்கையில் தனி விடயமாக சமர்ப்பிக்கப்படுவதில்லை. இருப்பினும், விடுதி வருமானம் மற்றும் செலவு விவரங்கள் அந்தந்த குறிப்புகளில் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன.

## IX. பாதீடு சமர்ப்பித்தல்

2023 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீடு தயரிக்கப்பட்டது. செயற்றிட்டத்தின் செயற்பாடுகளின்படி நிறுவனத்தின் பாதீடு தயாரிக்கப்பட்டது. வரவுசெலவு மற்றும் உண்மையான பெறுதிகளுக்கிடையில் ஒப்பீட்டுக்கூற்று 2023ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகளில் பக்க இலக்கம் 22 தொடக்கம் 23 வரை காண்பிக்கப்பட்டுள்ளது.

# ஆளுகைச் சபையின் அங்கத்தவர்கள்

# 03

1982 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனச் சட்டத்தின் 6 (1) வாசகத்திற்கு அமைவாக, பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களால் 2023 ஆம் ஆண்டிற்காக ஆளுகைச் சபையின் அங்கத்தவா்களாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**திரு.கே.டீ.என்.ரஞ்சித் அசோக**
செயலாளர்
பொது நிருவாகம், உநாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
*ஆளுகைச் சபையின் தலைவர்*

.........................................................................

**திரு.எம்.என். ரணசிங்க**
செயலாளர்
கல்வி அமைச்சு
*அங்கத்தவர்*

.........................................................................

**திரு.சுமித் அபேசிங்க**
தலைவர்
நிதி ஆணைக்குழு
*அங்கத்தவர்*

.........................................................................

**பேராசிரியர். சமிந்த ரத்நாயக்க,**
பிரதி உபவேந்தர்,
என்.எஸ்.பீ.எம். பசுமை பல்கலைக்கழகம்
*அங்கத்தவர்*

.........................................................................

**திரு.சுபுன் வீரசிங்க**
பணிப்பாளர்/ குழுமத்தின் பிரதான நிறைவேற்றலுவலர்,
டயலொக் எக்சியாடா தனியார் கம்பனி
*அங்கத்தவர்*

.........................................................................

**திரு.ஜூட் நிலுக்ஷன்**
பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
*அங்கத்தவர்*

.........................................................................

**திருமதி.வி.ஜெகராசசிங்கம்**
*அங்கத்தவர்*

.........................................................................

# சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கல்விசார் பதவியணி

04



**திரு.நாலக கலுவெவ**
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)

**பணிப்பாளர் நாயகம்**
- வியாபார கல்வி தொடர்பான கலாநிதி பட்டம் பெற்றுக்கொள்ளும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.(கொழும்பு பல்கலைக்கழகம்)
- பொது நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (கென்பரா பல்கலைக்கழகம்)
- முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (கென்பரா பல்கலைக்கழகம்)
- வியாபார முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின் படிப்பு டிப்ளோமா) (கொழும்பு பல்கலைக்கழகம்)
- பூங்காவியல் மற்றும் இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம்) (பேராதனை பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**
- வியாபார நிருவாகம்
- அரச நிருவாகம்
- முகாமைத்துவம்
- இடைநிலை முகாமைத்துவம்



**திருமதி.எச்.எம்.எஸ்.பீ.திசேரா**
இலங்கை நிர்வாக சேவை (சிறப்பு தரம்)

**மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)**
- பொதுக் கொள்கை தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (GRIPS - ஜப்பான்)
- முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா (ரஜரட்ட பல்கலைக்கழகம்)
- பொருளியல் தொடர்பான கலைமாணி (சிறப்பு) பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**
- தொழிற்படையின் புலம்பெயர்வு
- பெறுகை நடவடிக்கைகள்
- மனிதவள முகாமைத்துவம்



**கலாநிதி.டபிள்யு.எம்.எம்.ஜீ.டீ.விஜேகோன்**
மேலதிக பணிப்பாளர் நாயகம்
(ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி/முகாமைத்துவம் சாராத பயிற்சி)

- கருத்திட்டங்களின் இடர் முகாமைத்துவம் தொடர்பான தத்துவ முதுமாணி பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்)
- நகர சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான முதுமாணி பட்டம் (AIT, பங்கொக், தாய்லாந்து)
- புவியியல் தொடர்பான கலைமாணி (சிறப்பு) பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**
- ஆராய்ச்சி முறைமை
- கருத்திட்ட முகாமைத்துவம்
- பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல் (TOT)



**திருமதி.என்.ஜே.ஜயசுந்தர**
மேலதிக பணிப்பாளர் நாயகம் (தாபன அபிவிருத்தி)

- சுற்றாடல் பொருளியல் தொடர்பான விஞ்ஞான முதுமாணி பட்டம் (விவசாய பட்டநிலை பின்படிப்பு நிறுவனம், பேராதனை பல்கலைக்கழகம்)
- சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக பட்டநிலை பின்படிப்பு சான்றிதழ் (CDG, ஜேர்மனி)
- விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் (பேராதனை பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- சுற்றாடல் முகாமைத்துவம்
- நிலையான அபிவிருத்தி
- இடர் ஆபத்து முகாமைத்துவம்
- கருத்திட்ட திட்டமிடல்
- பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் (TOT)



**திரு.ஏ.வீ.ஜனாதர**
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)
மேலதிக பணிப்பாளர் நாயகம் பதில் கடமை (பட்டப்பின் படிப்பு கற்கைகள்)

- அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (ப்ளின்டர்ஸ் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா)
- அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
- பொருளியல் அபிவிருத்தி தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா, கொழும்பு பல்கலைக்கழகம)
- வர்த்தகமாணி (சிறப்பு) பட்டம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
- சட்டத்தரணி

**நிபுணத்துவ துறைகள்**

- நிருவாக சட்டம்
- அபிவிருத்தி பொருளியல்
- அரச நிதிக் கொள்கை
- தேசிய வரவு செலவிடல்



**திருமதி. அனுஷா பட்டவல கமகே**
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)
மேலதிக பணிப்பாளர் நாயகம் (கற்கை மற்றும் அபிவிருத்தி)

- வியாபார நிருவாகம் தொடர்பான கலாநிதி பட்டம் பொருட்டு திறமை பெற்றுள்ளவராவார். (கொழும்பு பல்கலைக்கழகம்)
- பெண்/ஆண் சமூக நிலைமை மற்றும் அபிவிருத்தி கல்வி தொடர்பான பட்டநிலை பின்படிப்பு
(மெல்பேர்ன் பல்கலைக்கழகம் - அவுஸ்திரேலியா)
- அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்)
- இலங்கை ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தின் பட்டயம் பெற்ற உறுப்பினர் ஆவார்
- விலங்கியல், இராசயனவியல் மற்றும் பூங்காவியல் தொடர்பான விஞ்ஞானமாணி (சிறப்பு) விசேட பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- மனித வளங்களின் முகாமைத்துவம்
- பெண்/ஆண் சமூக நிலை மற்றும் அபிவிருத்தி
- தலைமைத்துவம், குழு உணர்வு கட்டியெழுப்புதல், உளவியல் மற்றும் சமூக திறன்களின் அபிவிருத்தி தொடர்பாக பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல்
- சான்றிதழ்பெற்ற பிரதான பயிற்றுவிப்பாளர் (சிவில் சேவை கல்லூரி - சிங்கப்பூர்)



**செல்வி.சமந்தி சேனாநாயக்க**
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)

**சிரேஷ்ட ஆலோசகர்**

- தகவல் முறைமை தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் (மெல்பர்ன் பல்கலைக்கழகம்)
- தகவல் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான முதுமாணி பட்டம் (SLIIT)
- விஞ்ஞானமாணி பட்டம் (நுண் உயிரியல் விஞ்ஞானம், இரசாயனவியல்)

**நிபுணத்துவ துறைகள்**

- டிஜிட்டல் பரிணாமம்
- டிஜிட்டல் கட்டுப்பாடு
- புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் அபிவிருத்தி
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்



**திரு.ஜெ.ஜயசுந்தர**
இலங்கை நிருவாக சேவை (விசேட தரம்)

**சிரேஷ்ட ஆலோசகர்**

- அரச கொள்கை மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (மெல்பர்ன் பல்கலைக்கழகம்)
- அரசாங்க நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
- மொழியியல் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)
- கலைமாணி பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- அரச கொள்கை
- ஆங்கில மொழி
- தலைமைத்துவ கற்கை
- மனிதவள முகாமைத்துவம்



**திரு.ஆர்.ருஸாந்தன்**
இலங்கை நிருவாக சேவை (தரம் I)

**சிரேஷ்ட ஆலோசகர்**

- அபிவிருத்தி கல்வி தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (மெல்பர்ன் பல்கலைக்கழகம்)
- சமூகவியல் தொடர்பான முதுகலைமாணி பட்டம் (MKU, இந்தியா)
- வறுமை இல்லாதொழிக்கும் மூலோபாயம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு சான்றிதழ் (SLIDA)
- கால்நடை மருத்துவம் தொடர்பாக விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் (பேராதனை பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- முகாமைத்துவம்
- அரசாங்க நிருவாகம்
- தாபன விதிக்கோவை
- மானிட நடத்தை



**திரு.கே.ஆர்.கங்காதர**
இலங்கை நிருவாக சேவை (தரம் I)

**சிரேஷ்ட ஆலோசகர்**

- சர்வதேச மற்றும் அபிவிருத்தி பொருளியல் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (Australian National University)
- சர்வதேச மற்றும் அபிவிருத்தி பொருளாதாரம் தொடர்பான பட்டப்படிப்பு டிப்ளோமா (Australian National University)
- புவியியல் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம் (பேராதனை பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொருளாதார கொள்கை
- அரச நிதி கொள்கை
- நிலையான அபிவிருத்தி
- அரசாங்க நிருவாகம்



**திரு.எல்.கமகே**
இலங்கை கணக்காளர் சேவை (தரம் I)

**சிரேஷ்ட ஆலோசகர்**

- வியாபார நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (ரஜரட்டை பல்கலைக்கழகம்)
- கணக்கியல், நிதி தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கைகள்
- மூலோபாய முகாமைத்துவம்
- அரச நிதி
- விநியோகச் சங்கிலி



**திரு.சீ.டபிள்யு.கே.குறுப்பு ஆராச்சி**
இலங்கை கணக்காளர் சேவை (தரம் I)

**சிரேஷ்ட ஆலோசகர்**

- வியாபார நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் (International University of Japan)
- வியாபாரம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)
- வியாபார முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம் - நிதி (விசேட)

**நிபுணத்துவ துறைகள்**

- அரச நிதி
- தரவு முகாமைத்துவம்
- பெறுகை நடவடிக்கைகள்
- வரியிடல்



**திரு.என்.கௌரிதாசன்**
இலங்கை திட்டமிடல் சேவை (தரம் II)

**ஆலோசகர்**

- கிராமிய அபிவிருத்தி தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா)
- சுற்றாடல் பொருளியல் தொடர்பான விஞ்ஞான முதுமாணி பட்டம் (விவாசய பட்டநிலை பின்படிப்பு நிறுவனம், பேராதனை பல்கலைக்கழகம்)
- இ-அரசு தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா
- அரச நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா
- விஞ்ஞானமானி - விவசாயம் (சிறப்பு) பட்டம் (கிழக்குப் பல்கலைக்கழகம்

**நிபுணத்துவ துறைகள்**

- கருத்திட்ட முகாமைத்துவம்
- சுற்றாடல் முகாமைத்துவம்
- பொருளியல்
- ஊழல் எதிர்ப்பு



**செல்வி.ஆர்.எம்.ஏ.ரத்நாயக்கா**
இலங்கை நிருவாக சேவை (தரம் III)

**உதவி ஆலோசகர் / உதவி பணிப்பாளர் (பரீட்சை) ப.க.**

- அரச நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்)
- சட்டமாணி பட்டம் (இலண்டன்) (University of London International Programmes)
- வணிகமாணி பட்டம் (சிறப்பு) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
- சட்டத்தரணி

**நிபுணத்துவ துறைகள்**

- சட்டம்
- அரச நிருவாகம்
- மூலோபாய முகாமைத்துவம்
- ஓய்வூதிய நலன்கள்

**திருமதி.பீ.பீ.ஏ.போபகமகே (2023.06.16 வரை)**
இலங்கை நிருவாக சேவை (தரம் III)

**உதவி ஆலோசகர்**

- சர்வதேச உறவுகள் தொடர்பான கலைமுதுமாணி பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம
- விஞ்ஞானமாணி (பௌதீகமாணி) பட்டதாரி (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
- அரசாங்க நிருவாகம் தொடர்பான டிப்ளோமா (SLIDA)
- சர்வதேச உறவுகள் தொடர்பான உயர் டிப்ளோமா (சர்வதேச உறவுகள் தொடர்பான பண்டாரநாயக்க நிலையம்)
- இராஜதந்திர மற்றும் உலகளாவிய அலுவல்கள் தொடர்பான டிப்ளோமா (பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம்)

# சேவை வசதிகள் வழங்குபவர்களின் தகவல்கள்

# 05



**திருமதி.கே.அருணு பிரபா பெரேரா**
இலங்கை நிருவாக சேவை (தரம் I)

**பணிப்பாளர் (நிருவாகம்)**
- அபிவிருத்திக் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்பு (கொழும்பு பல்கலைக்ககம்)
- அபிவிருத்திக் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கொழும்பு பல்கலைக்கழகம்)
- கல்வி தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா (கொழும்பு பல்கலைக்கழகம்)
- விஞ்ஞானமாணி பட்டம் (கொழும்பு பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**
- அரச கொள்கை
- அரச நிருவாகம்
- மனிதவள முகாமைத்துவம்
- கருத்திட்டங்களின் திட்டமிடல்



**திரு.டபிள்யு.ஏ.கே.எஸ். டி சில்வா**
இலங்கை கணக்காளர் சேவை (தரம் I)

**பணிப்பாளர் (நிதிசார்)**
- அரச கொள்கை தொடர்பான பட்டநிலை பின்படிப்பு (நிதி), KDI, தென் கொரியா
- பட்டயம்பெற்ற அரச நிதி கணக்காளர் (CPFA) (இலங்கை)
- அரச நிதி மற்றும் கணக்கியல் நிறுவனம் (ஐக்கிய இராச்சியம்)
- விஞ்ஞானமாணி (கணக்கியல்) சிறப்பு பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**
- நிதி முகாமைத்துவம்
- திறைசேரி கணக்குகள்
- CIGAS மற்றும் அரசாங்கத்தின் சம்பள தயாரிப்பு முறைமை
- வெளிநாட்டு முகவர் அலுவலகங்களில் கணக்கீடு
- முற்பணக் கணக்கு



**திரு.டீ.கே.ஆர்.ஏ.தர்மசேன**
இலங்கை நிருவாக சேவை (தரம் I)

**பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்ப மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்பாடு)**
- தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு (மெல்பன் பல்கலைக்கழகம்)
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி பட்டம்) (கொழும்பு பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**
- நிறுவன உள்ளீடுகள் மற்றும் கட்டுமானங்கள்
- தகவல் தொழில்நுட்ப சேவை மேம்பாடு
- சைபர் பாதுகாப்பு மேம்பாடு
- IT திட்டங்களின் மேம்பாடு மற்றும் நிறுவன நோக்கங்கள், செயன்முறைகள் மற்றும் மாற்றல் முகாமைத்துவம் (Change Management)



**திருமதி.கே.எல்.எம்.சீ.குலரத்ன**
இலகை நிருவாக சேவை (தரம் I)

**பதிவாளர்**

- அரச கொள்கை மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக விஞ்ஞான முதுமாணி பட்டம் (மொனாஸ் பல்கலைக்கழகம்)
- சுற்றாடல் வனவியல் தொடர்பாக விஞ்ஞான முதுமாணி பட்டம் (விவசாய பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் - பேராதனை பல்கலைக்கழகம்)
- விஞ்ஞானமாணி பட்டம் விவசாயம் (சிறப்பு) பட்டம் (பேராதனை பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- அரச கொள்கை
- சுற்றாடல் முகாமைத்துவம்
- மூலோபாய முகாமைத்துவம்
- ஒழுக்காற்றுத் திட்டம்



**திருமதி.டீ.டீ.நாரன்கொட**
உள்ளகக் கணக்காய்வாளர்

- பொருளியல் தொடர்பான முதுகலைமாணி பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)
- வியாபார மற்றும் நிதி நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா (இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்களின் நிறுவனம்)
- வியாபார நிருவாகம் தொடர்பான வணிகமாணி பட்டம், மனித வளங்கள் (சிறப்பு) பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)
- பட்டயம் பெற்ற அரச நிதி கணக்காளர் (பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் - இலங்கை)

**நிபுணத்துவ துறைகள்**

- கணக்காய்வு
- கணக்கியல்
- பெறுகை
- மனித வளங்கள் முகாமைத்துவம்



**திருமதி.இந்து சமரவிக்கிரம**
உதவிப் பதிவாளர்

- பொருளியல் தொடர்பான முதுகலைமாணி பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)
- மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)

**நிபுணத்துவ துறைகள்**

- பொருளியல்



**திருமதி.பி.ஏ.பிரியானி பாலசூரிய**

**நூலகவியலாளர்**


- நூலக மற்றும் தகவல் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு பட்டம் (களனிப் பல்கலைக்கழகம்)
- சிங்கள பாடம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (பேராதனை பல்கலைக்கழகம்)
- கல்வி தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா (பேராதனை பல்கலைக்கழகம்)
- பட்டயம் பெற்ற நூலகவியலாளர்

**நிபுணத்துவ துறைகள்**


- நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம்
- கல்வி
- வெகுசன ஊடகம் மற்றும் தொடர்பாடல்
- ஆராய்ச்சி

# 06 அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்கமைப்புத் திட்டங்கள்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் செயற்பாட்டு கட்டமைப்பு



# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



# கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2023

# 07

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அனைத்து கற்கை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடா்பிலான பணிகளை மேற்கொள்ளும் முக்கியமான பிரிவு கற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவாகும். அரச துறை உத்தியோகத்தா்களின் ஆற்றல் விருத்தி தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக கற்றல் மற்றும் அபிவிருத்தி சேவைகளின் தேவைகள் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. இப் பணிக்காக அரசதுறையில் மாற்றமடையும் திறன் அபிவிருத்தியின் தேவைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆற்றலை வழங்கும் திட்டம் இப்பிரிவில் காணப்படும்.

அரசதுறை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முகாமைத்துவ மட்டத்தின் பதவியணிக்கான திறனை கட்டியெழுப்புவதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. பின்வரும் நாடளாவிய சேவைகளுக்காக புதிதாக சோத்துக் கொள்ளப்படும் நபா்களுக்கு உரிய சேவைப் பிரமானக் குறிப்புகளுக்கு அமைய சேவைக்கால ஆரம்ப பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல். (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்)
   - i. இலங்கை நிருவாக சேவை (இ.நி.சே)
   - ii. இலங்கை கணக்காளா் சேவை (இ.க.சே.)
   - iii. இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே)
   - iv. இலங்கை விஞ்ஞான சேவை (இ.வி.சே.)
   - v. இலங்கை கட்டடக் கலைஞா் சேவை (இ.க.க.சே)
   - vi. இலங்கை பொறியியலாளா் சேவை (இ.பொ.நி.சே)
   - vii. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (இ.த. தொ.தொ.சே)

கடந்த கால வினாத்தாள், புத்தகங்களின் அத்தியாயங்கள், இ-நூல் மற்றும் இ-ஜேர்னல் போன்ற டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வசதிகளும் கற்கை முகாமைத்துவ முறைமையின் ஊடாக பாடநெறிகளைப் பயில்பவர்களுக்கு இலவசமாக நிகழ்நிலை முறையிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு நூலகம் பயன்படுத்தல்**

| தொ. இல. | பாடநெறி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - இலங்கை நிருவாக சேவை (திறமை அடிப்படையில்) | 12 |
| 2. | சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை - வகுப்பு II தரம் II | 26 |
| 3. | சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்- இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை - II வகுப்பு தரம் II | 46 |
| 4. | முகாமைத்துவ சேவைக்கான சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 162 |
| | **மொத்தம்** | **246** |

### 15.2 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொ. இல. | பாடநெறி | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அலுவலக முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா | 36 |
| 2. | அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா (HNDIPCA) (வார நாட்களில்) 2022/2023 | 50 |
| 3. | HNDIPCA (வார இறுதி நாட்களில்) 2022/2023 | 12 |
| 4. | HNDIPCA (வார இறுதி நாட்களில்) 2023/2024 | 24 |
| 5. | HNDIPCA (வார நாட்களில்) 2022/2024 | 55 |
| 6. | Diploma in Professional English - 1 ஆம் குழுவினர் | 17 |
| 7. | Diploma in Professional English - 2 ஆம் குழுவினர் | 37 |
| | **மொத்தம்** | 231 |

**15.3 நூலகத்திற்கான தகவல் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2023ஆம் ஆண்டில் ஏற்கப்பட்டுள்ள மொத்தச் செலவு கீழ்வருமாறு அமையும்.**

| தொ. இல. | கொள்வனவு செய்யப்பட்ட பொருள் | செலவு |
|---|---|---|
| 1. | புத்தகங்கள் | 116,650.00 |
| 2. | தவணை வெளியீடுகள் (உள்நாட்டு) | 3,000.00 |
| 3. | தவணை வெளியீடுகள் (வெளிநாட்டு) | - |
| 4. | செய்தித் தாள்கள் | 175,964.00 |
| | **மொத்தம்** | 295,614.00 |

**15.4 நூலகத்தினால் 2023 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கட்டங்கள்**

- **நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நூலகச் சேவைகளின் தாக்கத்தினை மதிப்பீடு செய்தல்**
  நிலையான அபிவிருத்தி இலக்கின் கீழ் நூலகச் சேவைகளின் பெறுமதி மற்றும் தாக்கத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பான செயலமர்வு ஒன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நூலகத்தில் 2023 யூன் 16 ஆம் திகதி நடாத்தப்பட்டது. விசேட நூலகக் குழுவின் (Special Library Group) உறுப்பினர்களுக்கு இடையில் நிலையான அபிவிருத்தி இலக்கு பற்றி அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் விசேட நூலகக் குழுவினால் இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

- **நூலக தன்னியக்கமயமாக்கல் கருத்திட்டம்**
  2023 ஆம் ஆண்டில், KOHA நூலக முறைமையில் 12,000 புத்தகங்கள் உள்ளடக்கப்பட்டன.

# விசேட நிகழ்வுகள் மற்றும் அடைவுகள்

# 16

**16.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்:**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் ஒருவராகிய திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு பாராட்டுக்களை வழங்கும் போது, அவரது விசேட பணிக்காக கௌரவிப்பினை வழங்கி நிறுவகம் பெருமையுடன் மிளிரும் சந்தர்ப்பத்தில், நாம் எமது ஏனைய வரிவுரையாளர்களுக்கும் அவர்களது சேவையினைப் பாராட்டுவதற்காக அழைப்பு விடுத்தோம்.

எண்ணிலடங்காத நபர்கள் நிபுணத்துவத்தின் உச்சத்தை அடைவதற்கு பங்களிப்பினையும், தனது அயராத அர்ப்பணிப்பினையும், வழிகாட்டலினையும் வழங்கிய 19 ஆலோசகர்களின் சேவை பாராட்டப்பட்டது. குறித்த ஆலோசகர்களது பெயர்விபரம் பின்வருமாறாகும்.

- திரு.எம்.டி.டி. பீரிஸ்
- திரு.ஒஸ்ரின் பிரணாந்து
- திரு.லலித் வீரதுங்க
- திரு உதய ஆர். செனெவிரத்ன
- கலாநிதி.ஆர்.எச்.எஸ்.சமரதுங்க
- திருமதி.இந்திராணி சுகததாஸ
- திரு.எஸ்.ரனுக்கே
- திருமதி.வீ.ஜெகராசசிங்கம்
- திருமதி.சந்திராணி சேனாரத்ன
- திருமதி.பேர்ல் வீரசிங்ஹ
- திரு.ரவினாத ஆரியசிங்ஹ
- திரு.லலித் ஆர். டி சில்வா
- திரு.பியஸ் பிரணாந்து
- செல்வி.சந்திரா ஏக்கநாயக்க
- திரு.பாயிஸ் மொஹிதீன்
- கலாநிதி.ஹர்ஷ அதுருபான
- கலாநிதி.ட்ரெவிஸ் பெரேரா
- திரு.வீ.கனகசபாபதி
- திருமதி.பத்மினி ரத்னாயக்க





















### 16.2 பட்டமளிப்பு விழா - அரசாங்க முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் கற்கைப் பாடநெறி

அரசாங்க முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின படிப்பு பாடநெறியின் பட்டமளிப்பு விழா 2023 சனவரி 25 ஆம் திகதி வெற்றிகரமான முறையில் நடைபெற்றது. மேற்படி பாடநெறியினைப் பயின்ற 105 பேர் அரசாங்க முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா என்பவற்றினைப் பெற்றுக் கொண்டனர். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அழைக்கப்பட்ட அதிதியாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.நீல் பண்டார ஹபுஹின்னே அவர்கள் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் திரு அனுர திஸாநாயக்க அவர்களும் கலந்துகொண்டார். மேலும், ஆளுகைச் சபையினால் அனுமதிக்கப்பட்ட துணைச் சட்டங்களை மாண்புமிகு அமைச்சரின் அனுமதிக்காக 2023 மார்ச் மாதத்தில் முன்வைப்பதற்கும் பட்டநிலைபின் படிப்பு கல்வி நிறுவனத்திற்கு ஆற்றல் கிடைத்தது.










**16.3 கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விப் பிரிவில் பணிபுரியும் பதவிநிலைத் தரங்களில் உள்ள பௌத்த பிக்குமார்களுக்காக நடைபெற்ற ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம்**


கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விப் பிரிவில் பணிபுரியும் பதவிநிலைத் தரங்களில் உள்ள பௌத்த பிக்குமார் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக நடைபெற்ற ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் ஏற்பாடு செய்திருந்தது.















### 16.4 “பிரித் பிங்கம” தானம் வழங்கும் புண்ணிய பணி

கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விப் பிரிவில் கடமையாற்றும் பதவிநிலைத் தரங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அலுவலர் குழாத்தினரால் சுமார் 80 பேர் கொண்ட மகாசங்கத்தினருக்கு மாலை உணவு தானமாக வழங்கி வைக்கப்பட்டது. அதன்பின்னர், மகா சங்கத்தினரால் பிரித் ஓதும் வைபவம் ஒன்று நடாத்தப்பட்டதுடன் நிறுவகத்தின் அலுவலகர் குழாத்தினருக்கு மதகுருமாரினால் நன்றி நவிலலும் மேற்கொள்ளப்பட்டது.














### 16.5 துருக்கி சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (TICA) தூதுக் குழுவின் விஜயம்

துருக்கி சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் தூதுக் குழுவொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு விஜயம் செய்தது. இந்த விஜயத்தின் போது மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் உட்பட பணிப்பாளர் நாயகத்துடன் இந்த தூதுக் குழுவினர் மிகவும் வெற்றிகரமான மற்றும் பயனுள்ள கலந்துரையாடலை மேற்கொண்டனர். இலங்கையில் அரச ஊழியர்களின் ஆற்றலை விருத்தி செய்யும் முக்கியமான இலக்கினை நோக்கியும், பரஸ்பர ரீதியில் நன்மை பயக்கும் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான பெறுமதிமிக்க நிபுணத்துவ அறிவின் பரிமாற்றத்தை விருத்தி செய்வதற்கும் அடிப்படையில் கவனம் செலுத்தப்பட்டது.





**16.6 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் டிப்ளோமா வழங்கும் வைபவம் - 2023 அலுவலக முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா 2020/2021, 2021/22**

கல்வி நடவடிக்கைகளில் நிபுணத்துவ அறிவினை எடுத்துக்காட்டி, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் டிப்ளோமா வழங்கி வைக்கும் வைபவத்தில் அலுவலக முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா - 2020/2021. 2021/22 மற்றும் ஆங்கில மொழி டிப்ளோமா - 2022 ஆகியவற்றைக் கற்ற விசேட திறமைகளை வெளிக்காட்டிய குழுவினருக்கு டிப்ளோமா வழங்கி வைக்கப்பட்டது.





**16.7 "வழிகாட்டல்" : சனாதிபதி செயலாளரினால் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கு வெற்றிக்கான ஊக்குவிப்பினை ஏற்படுத்தல்**

இலங்கை நிருவாக சேவையின் 2015 குழுவின் பயணப் பாதை குறித்து ஆராயும் நோக்கில், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் மத்தியில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, திறன்களுடனான சிறந்த சந்தர்ப்பம் ஒன்றாகும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியின் செயலாளர் திரு. ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க அவர்கள் எதிர்காலத் தலைவர்களை சிறந்த நிலைக்கு இட்டுச்செல்லக்கூடிய வகையில் தமது பெறுமதிமிக்க அனுபவங்களையும் அறிவுச் செல்வத்தையும் தாராளமாக அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். கற்றல் மற்றும் தலைமைப் பண்புகளை மேம்படுத்துவதற்கு உகந்த சூழலை விருத்தி செய்து ஊக்கமான வகையில் அறிவு மற்றும் உள்ளார்ந்த யதார்த்தம் தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இந்தச் சந்திப்பின் ஊடாக வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றன.





### 16.8 “The Lush Harvest from Stagnant soil -Memoirs of Ariyaratne Hewage” என்ற தலைப்பில் புத்தக வெளியீடு

இலங்கை நிருவாக சேவையில் தேர்ச்சி பெற்ற, திறமையான அதிகாரியாக இருந்த மறைந்த திரு.ஆரியரத்ன ஹேவகே அவர்கள் எழுதிய "The Lush Harvest from Stagnant Soil Memoirs of Ariyaratne Hewage" என்ற புத்தக வெளியீட்டு விழா 2023 ஜுன் 22 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சங்ஹிந்த கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கௌரவ சட்டமா அதிபர் சட்டத்தரணி, ஜனாதிபதி சட்டத்தரணி திரு.சஞ்சய் ராஜரத்தினம், ஜனாதிபதியின் செயலாளர் திரு. ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் திரு. அனுர திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி செயலாளர்களான திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ, திரு. லலித் வீரதுங்க, திரு. உதய செனவிரத்ன மற்றும் முன்னாள் அரசாங்க உயர்மட்ட செயலாளர்களான எஸ்.சி. திரு.மான்னப்பெரும, திரு. ஜே.ஜே. செனவிரத்ன, திரு. மஹிந்த மடிஹேவா உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் இந்த முக்கிய நிகழ்வில் கலந்துகொண்டனர். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு.நாலக கலுவெவ அவர்கள் கலந்து கொண்டவர்களை வரவேற்று இந்த நிகழ்வின் நோக்கத்தை விளக்கியதுடன், முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் திரு.ஒஸ்டின் பெர்னாண்டோ தலைமையுரை ஆற்றினார்.








### 16.9 அரச கரும மொழிகள் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

அரச சேவை உத்தியோகத்தர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட சிங்களம் மற்றும் தமிழ் மொழி டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மொழிக் கற்கை நிலையம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் என்பன இணைந்து 2023.10.30 ஆம் திகதி ஐந்து வருட கால புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட்டன. அரச சேவை உத்தியோகத்தர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட சிங்களம் மற்றும் தமிழ் மொழி டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மொழிக் கற்கை நிலையம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் என்பன இணைந்து 2023.10.30 ஆம் திகதி ஐந்து வருட கால புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட்டன.

அரச சேவையில் புதிய வடிவிலான மொழிக் கல்வியை உறுதிப்படுத்தும் கூட்டு முயற்சியை வலுப்படுத்தும் வகையில் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அரச கரும மொழிகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரின்ஸ் சேனாதீர மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. நாலக கலுவெவ ஆகியோரினால் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

எமது சிறப்பு விருந்தினர்களாக அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் திரு.ஸமிந்த மஹலேகம், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் (மனித வள அபிவிருத்தி) திரு.ஏ.ஏ.டீ.எஸ்.அத்தபத்து மற்றும் அனைத்து மேலதிக பணிப்பாளர் நாயகங்கள், சிரேஷ்ட ஆலோசகர்கள் ஆகியோர் உட்பட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.










## 16.10 சைபர் பாதுகாப்பு தொடர்பான அறிவு தொடர்பில் நிகழ்நிலைக் கருத்தரங்கு




சமகாலத்திற்கு ஏற்ற, பரஸ்பர ரீதியில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் சூழல் ஒன்றில், சைபர் அச்சுறுத்தல்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன. தொழில்நுட்பம் தொடர்ந்து முன்னேறி வரும் போது, சைபர் குற்றவாளிகள் நமது சைபர் பாதுகாப்புகளை பலவீனப்படுத்தி, ஆபத்தில் வீழ்த்துவதற்காக நிதமும் புதிய தொழில்நுட்பங்களை தொடர்ந்து விருத்தி செய்து வருகின்றனர். நமது தகவல் முறைமைகள், தாபன வலையத் தளங்கள், நிதிச் சொத்துக்கள் மற்றும் மிகவும் முக்கியமான தகவல்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக விழிப்புடனும் கவனமாகவும் இருப்பதும் மிகவும் முக்கியம்.

சைபர் பாதுகாப்பு தொடர்பான துறையிலான அறிவு தொடர்பில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.வசந்த தேசப்பிரிய மற்றும் இலங்கை கணினி அவசர மறுமொழிகள் சாசனத்தின் (SLCERT) பிரதம தகவல் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. நிரோஷ் ஆனந்த ஆகியோர் இந்த மாநாட்டில் சபை உறுப்பினர்களாக கலந்து கொண்டனர். மேலும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் செல்வி.சமந்தி சேனாநாயக்க அவர்கள் இந்த நிகழ்நிலைக் கருத்தரங்கிற்கான வசதிகளை ஏற்பாடு செய்தனர்.

## 16.11 இலங்கை அபிவிருத்தி நிர்வாக முகவர் சேவைகள் தொடர்பான அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவன விழிப்புணர்வு செயலமர்வு

வருமானம் ஈட்டுதல் முதல் பல்வேறு சேவைகளை வழங்குதல் வரையான பொருளாதார இலக்குகளைக் கொண்ட அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்கள் என்பது அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் அரச தொழில் நிறுவனங்கள் ஆகும். இலங்கையில் 250 இற்கும் மேற்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்கள் உள்ளன. நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில், அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் நிறுவனங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்புகளின் வலையமைப்பு பலவீனமடைந்து உள்ளது. இந்த தொடர்பினை வலுப்படுத்தும் நோக்குடன், அரச தொழில் நிறுவனங்களின் சிரே'ட முகாமையாளர்களுக்காக 2023 யூன் 14 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த செயலமர்வு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன், சிரேஷ்ட முகாமையாளர்களுடன் பல்வேறு பயிற்சித் திட்டங்கள், முகாமைத்துவ ஆலோசனைகள், பயிற்சி ஆலோசனைகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் என்பன தொடர்பில் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதுடன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு.நாலக கலுவெவ அவர்களினால் இந்த விழிப்புணர்வூட்டல் கூட்டத்தொடர் நடாத்தப்பட்டதுடன், அதன் மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் விமான சேவை, மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி உட்பட அரசிற்கு உரித்தான முப்பது (30) தொழில் நிறுவனங்களின் சிரேஷ்ட முகாமையாளர்கள் இந்த செயலமர்விலும் பங்குபற்றினர்.

அனைத்து முகாமையாளர்களும் தங்களின் சவால்கள் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொண்டதுடன், அந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சேவைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும், அரசுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்களின் பயிற்சித் தேவைப்பாடுகள் தொடர்பிலும் கண்டறியப்பட்டன.

இந்த செயலமர்வில் நிதியமைச்சின் பொது வியாபாரத் திணைக்களத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.





### 16.12 மாத்தறை மாவட்ட செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "சருசார மாதொட்ட" கிராமிய பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான நிகழ்நிலைக் கருத்தரங்கு

பொருளாதாரப் பிரச்சினைகள் தீவிரமடைந்து கொண்டிருந்த வேளையில் உணவுப் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு மாத்தறை மாவட்ட செயலகத்தினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது 2022 ஏப்ரல் மாதத்தில் ஆகும். அதன் பின்னர் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒரு விரிவான கிராமப்புற பொருளாதார மற்றும் மனித வள மேம்பாட்டு முயற்சியாக விரிவுபடுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம் முதல் தற்போது வரை உள்ள தனிச்சிறப்பு என்னவென்றால், இந்த திட்டம் திறைசேரியின் ஒதுக்கீட்டில் தங்கியிருக்கவில்லை என்பதாகும். "சருசார மாதொட்ட" என்ற தலைப்பிலான நிகழ்நிலைக் கருத்தரங்கு 2023 யூலை மாதம் 13 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இருமொழியில் நடத்தப்பட்டது.

மாத்தறை மாவட்ட செயலகத்தின் இந்த முயற்சி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நாடு முழுவதும் தங்கள் அனுபவங்களை விரிவாக்கம் செய்வதற்கும் மாத்தறை மாவட்ட செயலாளர் திரு.வை.விக்ரமசிங்க அவர்கள் மற்றும் "சருசார மாதொட்ட" கருத்திட்டத்தின் உபகருத்திட்டங்களுக்குப் பொறுப்பாக உள்ள அலுவலர்கள் இதன் போது பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

### 16.13 பாலின சமத்துவம் மற்றும் திருநங்கைகளை சட்டப்பூர்வமாக்குதல் என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்நிலைக் கருத்தரங்கு

"பாலின சமத்துவம் மற்றும் திருநங்கைகளின் பால்நிலை தன்மையை சட்டப்பூர்வமாக்குதல்" என்ற தலைப்பில் நிகழ்நிலைக் கருத்தரங்கு ஒன்று இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தில் உள்ள 2003 ஆம் ஆண்டின் குழுவினருடன் நடத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் பெருமை கொள்கிறது. 2023 டிசம்பர் 14 ஆம் திகதி, நடைபெற்ற இந்த நிகழ்நிலைக் கருத்தரங்கில், "பாலின சமத்துவம் மற்றும் திருநங்கைகளின் சட்ட உரிமைகள்" தொடர்பாக நடைபெற்ற மிக முக்கியமான கலந்துரையாடலில் Zoom தொழிநுட்பத்தின் ஊடாக இணைந்து கொள்வதற்கு பங்குபற்றுபவர்களுக்கு இயலுமாகியது.

### 16.14 இலங்கையில் அரச-தனியார் பங்குடைமைகளை நடைமுறைப்படுத்துவத்தல் தொடர்பில் உள்ள சவால்கள் பற்றிய கருத்தரங்கு

அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா (HNDIPCA) பாடநெறியினைக் கற்கும் 22/23 குழுவினாரால் இலங்கையில் அரச-தனியார் பங்குடைமை (PPP) தொடர்பில் நிலவும் சிக்கலான மற்றும் விரிவான விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்து சவாலான கருத்தரங்கு ஒன்று முன்வைக்கப்பட்டது. இந்த மாநாட்டில், நமது நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பொது-தனியார் பங்குடமை ஒன்றிற்காக தற்போதைய சவால்களைத் தீர்த்து வைத்து புதிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன், இந்தக் கருத்தரங்கில் நிபுணர்களின் கருத்துக்கள், பரஸ்பர செயற்பாட்டுக் கலந்துரையாடல்கள் மற்றும் வலுவான அரச-தனியார் பங்குடைமைக்கான தொலைநோக்கு என்பனவும் இங்கு முன்வைக்கபட்டன.










**16.15 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அலுவலர் குழாத்தினருக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

"ஒரே இலக்கை நோக்கிய கூட்டுப் பயணத்தில் ஒரு புதுமையான அனுபவம் சேர்க்கப்பட்டது"

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அலுவலர் குழாத்தினருக்கான கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2023 நவெம்பர் 12 ஆம் திகதி அவிஸ்ஸாவெல பேர்ப்பிள் சன் ரிசோர்ட்டில் நடைபெற்றது.






# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2023

17

2021.11.16 ஆம் திகதிய மற்றும் 2021/01 ஆம் இலக்க அரசிற்கு உரித்தான தொழில் நிறுவனங்களின் நல்லாட்சிக்கான வழிகாட்டல் சுற்றுநிருபத்தின் 4.2 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், போதியளவு உள்ளக நிருவாகம் மற்றும் இடர் முகாமைத்துவத்துடன்கூடிய நிறுவனத்தின் நேர்மை, கணக்கீட்டுத் தரங்கள், நிதி அறிக்கையிடல் செயற்பாடுகளுக்கு அமைய உரிய கால எல்லைக்குள் வகுக்கப்படும் தரம்மிக்க நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக ஆளுகைச் சபையின் செயற்பாடுகளுக்கு தற்போது 03 ஆளுகைச் சபை உறுப்பினர்களைக் கொண்டமைந்த கணக்காய்வுக் குழுவினால் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது.

### 17.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு

2023 ஆம் ஆண்டிற்கான நிருவாக சபையினால் நியமனம் செய்யப்பட்ட கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு :

| பெயர் | நியமனம் செய்யப்பட்ட திகதி |
|---|---|
| திரு.ஜுட் நிலுக்ஷன்<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய வரவு செலவுத் திணைக்களம் | முதலாவதாக நியமிக்கப்பட்ட திகதி - 2022.03.02<br>இரண்டாவதாக நியமிக்கப்பட்ட திகதி - 2022.11.09 முதல் இன்று வரை |
| திருமதி.வீ.ஜெகராசசிங்கம்<br>உறுப்பினர் ஆளுகைச் சபை | 2020.11.09 முதல் இன்று வரை |
| திரு. ஹர்ச விஜேவர்தன<br>மேலதிக செயலாளர்<br>பிரதமர் அலுவலகம் | 2023.05.30 முதல் இன்று வரை |

கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தினைப் பிரதிநித்துவப்படுத்தும் கணக்காய்வு உத்தியோகத்தர் திருமதி ஏ.பி. ரேணுகா அல்விஸ் அவர்கள் அவதானிப்பாளராக பங்கேற்றார். இதற்கு மேலதிகமாக, பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ குழு ஆகியோர் கூட்டத்திற்கான மேற்பார்வையாளர்களாக பங்கேற்றனர். விசேட விடயங்கள் தொடர்பில் கணக்காய்வுக் குழுவினை அறிவுறுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் கணக்காய்வுக் குழுவின் முன்னிலைக்கு அவ்வப்போது வரவழைக்கப்பட்டனர்.

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வாளர் குழுவின் செயலாளர் பதவியில் கடமைகளை மேற்கொண்டார். ஆண்டிற்குள் நான்கு (04) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 17.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை PED 2021/01 அமைய, குழுவினால் கீழ் குறிப்பிடப்பட்ட அரசாங்கத்தின் பொறுப்புக்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அ. இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றை போதியளவில் மேற்கொள்ளல்

ஆ. நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகள், தாபன சட்டம், சுற்றுநிருபங்களுக்கு உரிய தகவல் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய உரிய நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கு ஒத்தியங்குதல்

இ. நிலவும் உள்ளக நிருவாகம் மற்றும் இடர் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் இல்ஙகை கணக்காய்வு நியமங்கள் மற்றும் அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருபங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக போதியளவில் உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள்

ஈ. அமைப்பின் உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டின் செயலாற்றுகையினை உறுதிப்படுத்தல்.

உ. இடர் குழுக்கள் செயற்படாத சந்தர்ப்பங்களில் விசேட வர்த்தக / நிதி அவதானங்களை அடையாளம் காணல், மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம்.

ஊ. ஆளுகைக் குழு அங்கத்தவர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ குழுக்கள் சார்ந்த தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல்.

**17.3 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பிரதான விடயங்கள் கீழ்வருமாறு.**

| கூட்ட இலக்கம் மற்றும் திகதி | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் |
|---|---|
| 2023/01 - 21.02.2023 | • உள்ளக மற்றும் வெளிவாரியான கணக்காய்வுப் பொழிப்பு அறிக்கை மற்றும் கவனம் செலுத்தப்பட்ட பிரச்சினைகள்<br>- வதிவிட வசதிகளை ஒதுக்குதல் மற்றும் பராமரிக்கும் முகாமைத்துவக் கட்டமைப்பு<br>- வகுப்பறைகளை ஒதுக்குதல் மற்றும் பராமரிப்பு என்பவற்றிற்கான முறையான கட்டமைப்பு<br>- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அரசாங்க முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு கற்கையினை முகாமைத்துவம் செய்யும் முறைமை மற்றும் இடைக்காலச் சட்டங்களைத் தயாரித்தல்<br>- சிற்றுண்டிச் சாலையின் முகாமைத்துவ முறைமை<br>• தொலைக்கல்வி மற்றும் வீடியோ கலந்துரையாடல் பிரிவு தொடர்பான அறிக்கை |
| 2023/02 - 12.06.2023 | • 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13 (7) (அ) பிரிவின் பிரகாரம், 2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் இறுதி அறிக்கையின் சாராம்சம்.<br>• 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கை<br>• உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் முகாமைத்துவத்தின் பதில்<br>- நுவரெலியா சுற்றுலா விடுதியின் முகாமைத்துவ முறைமை<br>- 2022 ஆம் ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மனித வள முகாமைத்துவக் கட்டமைப்பு<br>- பொது நிதி முகாமைத்துவ முறைமை மற்றும் பிரச்சினைகள்<br>• தொலை, இ-கற்கை வலையமைப்பினைத் தாபிப்பதற்கு உரிய வகையில் செலுத்த வேண்டியுள்ள பணம்<br>• இலங்கை கணக்காளர் சேவையின் சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் செலுத்த வேண்டியவைகள் |
| 2023/03 - 05.10.2023 | • கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் கவனம் செலுத்தப்பட்ட பிரச்சினைகள்<br>- நூலகச் சேவையினைத் தன்னியக்கமாக்கல் மற்றும் முறையான கட்டமைப்பினை விருத்தி செய்தல்<br>- ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவம் அல்லாத மட்டத்திலான பயிற்சி முறைமை<br>- டயலொக்கிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளை ஈடு செய்தல்<br>• சொத்து ஆவணம்<br>• அகற்றப்பட வேண்டிய சொத்துக்களின் அறிக்கை |
| 2023/04 - 29.12.2023 | • உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் முகாமைத்துவத்தின் பதில்<br>- வெளிவாரியான மற்றும் உள்வாரியான பரீட்சைகளை நடாத்துதல்<br>- அரசாங்க முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு பரீட்சைகள் முறைமை மற்றும் கிடைக்கப் பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய<br>- பரீட்சைகள் பிரிவின் செயலாற்றுகை நடைமுறை வழிகாட்டல் கோவை<br>• உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் இடர்கள் தொடர்பான ஆவணம் - 2024<br>• சட்ட ரீதியான பொறுப்புக்கள் தொடர்பான நிலைமை |

### 17.4 பிரதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

| கண்காணிப்பு | பரிந்துரை |
|---|---|
| பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைகள், சொத்துக்கள் ஆவணம், அகற்றல் ஆவணம் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | • இந்தப் பணியினை பூர்த்தி செய்த பின்னர் 2023 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சொத்துக்களின் பெறுமதியினை சீர்செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>• கணக்குகள் பிரிவின் சொத்துக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்கு பரிந்துரை செய்தல் |
| நுவரெலியா விடுதியின் நிருவாக நடவடிக்கைகள் | • விடுதிகள் பொறுப்பாளரை நியமனம் செய்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல் |
| அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாம் சட்டத்தில் திருத்தம் செய்தல | • APA/13/0237/523/011 மற்றும் APA/20/2066/315/017 அமைய சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டது. |
| அரசாங்க முகாமைத்துவப் பட்டப்பின் படிப்புக்கான துணைச் சட்டங்களைத் தயாரித்தல் | • தேவைப்பாட்டிற்கு அமைய துணைச் சட்டங்களைத் தயாரித்தல |
| ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ மட்டம் அல்லாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | • ஆராய்ச்சிப் பிரிவிற்காக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இரண்டு பேரினை இணைத்துக் கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br>• நிகழ்நிலை முறையின் ஊடாக முகாமைத்துவ மட்டம் அல்லாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரை செய்யப்பட்டது. |
| தோலை இ-கற்கை வலையமைப்பினைத் தாபிப்பதற்கு உரிய வகையில் செலுத்த வேண்டியுள்ள பணம் | • திரண்ட அடிப்படையில் கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டியவைகளை தீர்த்து வைப்பதற்காக ஆளுகைச் சபை பத்திரம் முன்வைத்தல் |

**நிதி அறிக்கையிடல்**
தரப்பினர்களுக்கு வழங்கப்படும் தகவல்களில் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவற்காக குழுவினால் தற்போது அமுல்படுத்தப்படும் நிதி அறிக்கையிடல் முறையின் விளைதிறன் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. கணக்கீட்டு புத்தகங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத்தர நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ஆளுகைச் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக குழுவினால் ஆளுகைச் சபையிடம் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. சகல கொடுக்கல் வாங்கல்களும் சரியான முறையிலும் முழுமையாகவும் கணக்கீட்டுப் புத்தகங்களில் அறிக்கையிடப்படுவதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குவதற்காக உள்ளக நிருவாக முறைமைகளில் மற்றும் செயலாற்றுகை நடைமுறைகளில் போதிய தன்மை மற்றும் விளைத் திறன் என்பன குழுவினால் மீளாய்வு செய்யப்படும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும் விசேட அனுமானங்கள் மற்றும் தீர்மானங்களை உள்ளடக்கிய பயன்பாட்டுத் தகவல்களும் உள்ளடக்கிய, சகல காலாண்டு அடிப்படையிலான கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத இடைக்கால நிதிக் கூற்றுக்கள் குழுவால் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

**உள்ளக நிருவாகம்**
நிதி அறிக்கையிடல் முறைமை தொடர்பில் காணப்படும் உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் கணக்காய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டது. இச் செயற்பாடுகள் ஊடாக சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளில் காணப்படும் ஒத்தியங்கு தன்மையினை உறுதிப்படுத்தல், இடர் நிலைமைகளை நிருவகிப்பதற்காக தற்போதுள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் போதியளவு, பயனுறுதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மதிப்பீடு செய்யப்படும். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளக நிருவாக முறைகளின் பயனுறுதியினை விருத்தி செய்வதற்காக உள்ளக கணக்காய்வாளரினால் வழங்கப்படும் பரிந்துரைகள் தொடர்பில் பொருத்தமான செயற்பாடுகள் முகாமைத்துவத்தினால் முன்னெடுப்பது குழுவினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. உள்ளக நிருவாக அமைப்பின் அடிப்படை மூலம் ஆளுகை சபைக்கு அதன் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் தேவையான செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் ஆற்றல் வழங்கப்படுகின்றது.

**உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்**
உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள், கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமாக மேற்கொள்ளப்படுவதாக கணக்காய்வுக் குழுவினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய பக்கச்சார்பற்ற வகையிலும் திறன்கள் மற்றும் உரிய தொழில்சார் நுணுக்கம் என்பவற்றுடனும் மேற்கொள்ளப்படுவதாக கணக்காய்வுக் குழுவினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகளின் விடயப் பரப்பு, வளங்கள், அதன் உள்ளடக்க விடயப்பரப்பு மற்றும் விளைதிறன் என்பவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

**ஜூட் நிலுக்ஷன்**
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

PAF/B/SLIDA/01/23/03 **2024 மே மாதம் ............. ஆம் திகதி**

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்,

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07**

(i) நியமம் 42 பிரகாரம், கட்டிடங்களின் பெறுமதியில் கொள்ளளவு மதிப்பு அறிக்கையிடும் திகதியில் நியாயமான பெறுமதி பயன்படுத்தப்பட்டு மீள்கணிப்பீடு செய்யவில்லை என்பதுடன், 2016 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு கட்டிடங்களின் பெறுமதி ரூபா.404,961,000 இற்கு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii). நியமத்தின் 92 (ஆ) பந்தி பிரகாரம் செலவினம் ரூபா.266,931,869 ஆன முற்றுமுழுதாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து, மேலும் பயன்படுத்துகின்ற சொத்துக்களின் கொள்ளளவு பெறுமதி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 செப்தெம்பர் 27 ஆம் திகதிய அபஇ.⁚16/1826/7334/023 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானம் மூலம் இலவச அளிப்பாக நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருந்த நுவரெலியா சுற்றுலா பங்களா மற்றும் காணி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை.

(இ) கொள்வனவு பெறுமதி ரூபா.2,940,696 ஆன மென்பொருள் பெகேஜ் மீளாய்விற்கான ஆண்டில் முற்றுமுழுதாக தேய்மானத்தில் சொத்துகளாக கவனத்தில் கொண்டமையால் ஆண்டுக்கு ஏற்புடையதான ரூபா.588,139 ஆன தேய்மானம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வாகனங்களின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டுக்காக ரூபா.8,999,190 தேய்மானம் செய்வதற்குப் பதிலாக ரூபா.9,384,190 தொகை தேய்மானம் செய்தமை காரணமாக ரூபா.385, 000 ஐ அதிகமாக தேய்மானம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள

அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறதல் வேண்டும்

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும்போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக போதியளவில் பொருந்தாதுள்ளதா என்பதைக் கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களை அடிப்படையாகக்கொண்டும், இந்த ஏனைய தகவல்கள் போதியளவில் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், அந்த விடயம் என்னால் அறிக்கையிடல் தேவையானதாகும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக

காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

**2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

**2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.**

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையில் உள்ள எவரேனுமொரு உறுப்பினருடன் தொடர்புகொண்டு, ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 -2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

| | சட்டங்கள், விதிகள்/பிரமாணங்களின் தொடர்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| அ). | 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10 (05) பிரிவு | ஒதுக்கீட்டின் பின்னர் எஞ்சுகின்ற தேறிய வருமானம் இணைந்த நிதியத்திற்கு அனுப்பபடுதல் வேண்டுமாயினும், நிறுவனம் அதற்கு ஒழுங்கமைவானதாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| ஆ) | 1982 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனச் சட்டத்தின் 31 ஆவது பிரிவு | எந்தவொரு சட்டமும் அமைச்சர் அவர்கள் அங்கீகரிக்கப்படும் வரை வலுவாகாத போதிலும், பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவில் துணைச் சட்டக் கோவை (By Laws) பொருட்டு ஏற்புடைய அனுமதி பெற்றுக்கொள்ளாது பட்டப்பின் படிப்பு பிரிவின் வழிகாட்டலாக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| இ) | 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, பல்கலைக்கழகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக,

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ள 28/10, மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள 1.1863 ஹெக்டயர் காணி 1968 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படினும், சுவீகரிப்பு பணிகள் இதுவரை முடிவுறுத்தப்படவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டு பெப்ருவரி 07 ஆம் திகதிய இலக்கம் 13/0150/523/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மூலம் நிறுவனம் தாபிக்கப்பட்ட சட்டம் திருத்தம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படினும், அதனை மேற்கொள்ளவில்லை.

(இ) 2013 ஏப்ரல் 19 ஆம் திகதி 13/0237/523/011 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மூலம் மேற்கொண்ட தீர்மானங்களை செயற்படுத்தாமை.

(i) நிறுவனத்தின் கல்விசார் பதவியணிக்கு இரண்டாம் நிலையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்கையில் பகிரங்க அறிவிப்பு மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பதிலாக, அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்தல்.

(ii) அரசாங்க அலுவலர்களின் அறிவு மற்றும் ஆற்றல் மென்மேலும் அதிகரிப்பதற்கும் அவர்களின் எண்ணக்கருக்களில் நேர்மறை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முடியுமான வகையில் நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற பயிற்சி கற்கைநெறிகளின் உள்ளடக்கம், பயிற்சி முறைமைகளை ஆய்வுக்குட்படுத்தி அவற்றை மீண்டும் தயாரித்தல் தொடர்பில் இரண்டு மாதக் காலப்பகுதிக்குள் அமைச்சரவையிடம் அறிக்கை சமர்ப்பித்தல்.

(iii) அரசாங்க அலுவலர்களுக்கு அரச நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சி வழங்குவதற்காக நிறுவனம் பணியாற்றுதல் வேண்டுமாயினும், அரச துறையில் நிறைவேற்று அலுவலர்களை பயிற்றுவிப்பதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டு செயற்படுவதால் நிறைவேற்று அல்லாத சேவைகளில் அலுவலர்களை பயிற்றுவிக்கும் பணி தவறியிருத்தல்.


(இ). 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பீடீ/அய்/2008 இலக்கம் கொண்ட உள்ளக சுற்றறிக்கையின் படி நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்களுக்கு இரண்டாம் நிலை கற்கை படியை அடிப்படை சம்பளத்திலிருந்து 50% ஐ பெற்றுக்கொள்வதற்கு மாதமொன்றுக்கு மனித மணித்தியாலங்கள் 45 ஆன விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டுமாயினும், குறித்த போதனை மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யாத பட்சத்திலும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மீளாய்விற்கான ஆண்டில் ஆரம்ப 07 மாதங்களுக்கு மட்டும் மேற்கொள்ளப்பட்ட கணக்கிடல் பிரகாரம் 10 ஆலோசகர்களிடம் ரூபா.2,792,232 ஆன படி செலுத்தப்பட்டிருப்பினும், குறித்த ஆலோசகர்களால் ஈடுசெய்ய வேண்டிய 3240 மணித்தியாலங்கள் ஈடுசெய்த உண்மையான மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1392.50 ஆகியதால் 1847.5 பயிற்சி மணித்தியாலங்கள் ஈடு செய்யப்படவில்லை.

(ஈ) பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறிகளை விட்டு விலகிய 43 அலுவலர்களிடமிருந்து ரூபா.10,869,375 ஆனது 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரை அறவிடப்படாதிருந்தது.

(உ) கடந்த ஆண்டுகளில் மூலதன செலவின்ங்களின் பொருட்டு திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற எனினும் பயன்படுத்தாது நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருந்த தொகை ரூபா.25,323,146 ஆகும்.

(ஊ) 06 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் அறிவிடப்படாதிருக்கும் ரூபா.1,933,325 ஆன கிடைக்கப்பெற வேண்டிய 20 மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**டபிள்யு.பீ.சீ. விக்கிரமரத்ன,**
கணக்காய்வாளர் அதிபதி.




ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය, රාජ්‍ය පරිපාලන හා කළමණාකරණය පිළිබඳ දැනුම හා කුසලතා වර්ධනය කිරීම සඳහා ශ්‍රී ලංකාවේ ප්‍රමුඛතම රාජ්‍ය අංශයේ පුහුණු ආයතනයයි. කළමනාකරණ පුහුණුවලට අමතරව කළමනාකරණ උපදේශන සේවා සැපයීම හා පර්යේෂණ කළමනාකරණයට අදාල සේවා සැපයීම මෙන්ම ආයතනික කළමනාකරණ ක්‍රමවේදයන් සමාලෝචනය හා වැඩිදියුණු කිරීම ද මෙම ආයතනයේ කාර්‍යභාරයට අයත් වේ. මෙය 1982 අංක 09 දරණ පාර්ලිමේන්තු පනත යටතේ පිහිටුවනු ලැබූ ආයතනයකි.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் என்பது, பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் அறிவை மேம்படுத்துவதற்கும் திறன்களை மேம்படுத்துவதற்கும், இலங்கையின் முதன்மையான பொதுத்துறை பயிற்சி நிறுவனமாகும். முகாமைத்துவ பயிற்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, ளுடுஜனுயு ஆனது முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் மற்றும் முகாமைத்துவத்தின் அடையாளம் காணக்கூடிய செயற்பாட்டுப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவன அமைப்புகளை மீளாய்வு செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளும்.

Sri Lanka Institute of Development Administration (SLIDA) is the premier public sector training organization in Sri Lanka, for the development of knowledge and improvement of skills in Public Administration and Management. In addition to management training activities the SLIDA also undertakes Management Consultancy Services and Research to develop identifiable functional areas of management as well as review and improve organizational systems.



**ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය**
**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்**
**SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION**

28/10, Malalasekara Mawatha, Colombo 07, Sri Lanka.
Tel: +94-11-5980200 | Email: info@slida.gov.lk
Web: www.slida.lk

PRINTEC | 0112 815 816